பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 05 புதன்கிழமை (18.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :52

## 23 அதிகாலை பாலா கட்டுநாயக்கா வருகை 25ஆம் திகதி பிரபா - சொல்ஹெய்ம் சந்திப்பு



கொழும்பு, ஜன.18

ஸ்தம்பித்துப் போயிருக்கும் அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கான பேச்சுகளை நடத்துவதற்காக அடுத்த வாரம் இலங்கை வரவுள்ள நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 25ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்துப் பேசுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம், அதற்கு முன்னதாக - பெரும்பாலும் 23ஆம் திகதியன்று - இலங்கை வரவுள்ள விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், வன்னிக்கு விரைந்து புலிகளின் தலைவருடன் மந்திராலோசனை நடத்தவுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கண்காணிப்புக் குழுவின் அலுவலகப் பணிகள் தற்காலிக நிறுத்தம்

திருகோணமலை,ஜன.18

திருகோணமலையில் பணியாற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமது அலுவலகப் பணிகளை நேற்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

அங்கு பணிபுரிந்த கண்காணிப்பாளர்கள் அலுவலகத்தைப் பூட்டிவிட்டு ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளனர்.

அலுவலகம் மூடப்பட்டாலும் தமது கண்காணிப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

# படை அட்டூழியங்களை ஆட்சேபித்து

# தமிழ் எம்.பிக்கள் சபைக்குள் கலாட்டா

## நாடாளுமன்றின் நேற்றைய அமர்வு நடத்தப்பட முடியாமல் ஒத்திவைப்பு

கொழும்பு,ஜனவரி18

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை, மானிப்பாயில் மாவீரர் குடும்பம் சுட்டுக் கொல்லப்பட்டமை உட்பட வடக்கு-கிழக்கில் இடம்பெறும் கொலைகள், ஆள்கடத்தல் மற்றும் படையினரின் அட்டூழியங்களை எதிர்த்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினால் நாடாளுமன்ற அமர்வுகள் நேற்றுக் குழம்பின.**

**அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்புகளை மீறி சபையைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் சபை அமர்வுகளை சபாநாயகர் டபிள்யூ.ஜே. எம்.லொக்குபண்டார இன்று காலை வரை ஒத்திவைத்தார்.**

நேற்று நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்க முன்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சபாநாயகர் சபைக்குள் பிரவேசிக்கும் வாயிலுக்கருகில் அமர்ந்து எதிர்ப்புப் போராட்டமொன்றை நடத்தினர்.

இதனால், அந்த வாயிலின் ஊடாக வருவதைத் தவிர்த்துவிட்ட சபாநாயகர், சபாபீடத்திற்கு பின்னாலுள்ள கதவின் ஊடாகத் தனது ஆசனத்திற்கு வந்தார். அதேசமயம் செங்கோலையும் படைக்கல சேவிதர் ஆளுங்கட்சியின்

(02ஆம் பக்கம் பார்க்க)

## தச்சன்தோப்பில் இருவர் சுட்டுக்கொலை!

கைதடி .ஜன.18

நேற்றுமுன்தினம் இரவு வேலை முடித்து வீட்டிற்குச் சென்ற சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளரும் அவரது உதவியாளரும் நேற்றுக்காலை வீதியில் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தனர்.

இந்தச் சம்பவம் தச்சன்தோப்பில் இடம் பெற்றிருக்கின்றது.

நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பைச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திடீர் வெடிச்சத்தத்தால் நகரப்பகுதியில் களேபரம்

நகரில்நேற்றுமதியம்திடீரெனக்கேட்ட வெடிச் சத்தத்தால் பெரும் களேபரம் ஏற்பட்டது.

நகரின் மத்திய பகுதியில் மினிபஸ்கள் தரிக்கும் பிரதேசத்தை ஒட்டியே இந்த வெடிச் சத்தம் எழுந்தது.

இந்த வெடிச் சத்தத்தைக் கிரனேட் வெடிப்பு என்று நினைத்த பொதுமக்கள் பாதுகாப்புத் தேடி நாலாபுறமும் சிதறி ஓடினர். வர்த்தக நிலையங்களும் இழுத்து மூடப்பட்டன. பஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கெருடாவிலில் கிளைமோர் தாக்குதல் இரண்டு இராணுவத்தினர் உயிரிழப்பு!

சாவகச்சேரி - கனகம்புளியடி வீதியில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இரு இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்; மற்றொரு சிப்பாய் படுமோசமாகக் காயமுற்றார். கெருடாவில் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக டிராக்டரில் பயணம் செய்த படையினரை நோக்கி இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

தென்மராட்சியில் சாவகச்சேரி வடக்கே நான்கு மைல் தொலைவில் உள்ள சரசாலையில் கனகம்புளியடி - பருத்தித்துறை வீதியில் டிராக்டரில் பயணம் செய்த இராணுவத்தினரே இந்தக் கிளைமோர் தாக்குதலில் சிக்கிப் பலியாகினர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இத் தாக்குதலுக்கு பொங்கியெழும் மக்கள்படை உரிமை கோரியுள்ளது என இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டது. (க-3-117)

## திருமலையில் கிளைமோரில் 10 கடற்படையினர் படுகாயம்

### படையினர் சூட்டில் 2 பொதுமக்கள் பலி; அறுவர் காயம்

திருகோணமலை,ஜன.18

திருகோணமலை மூன்றாம் கட்டைப் பகுதியில் நேற்றுக்காலை 10 மணியளவில் கடற்படையினர் பயணித்த பஸ் ஒன்றின் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் பத்து கடற்படையினர் காயமடைந்தனர். இதனையடுத்து படையினர்மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இரு பொதுமக்கள் பலியாகினர். மேலும் ஆறு பொதுமக்கள் காயமடைந்தனர்.

மூன்றாம்கட்டை, பண்ணை வீதியில் அமைந்துள்ள மிருக வைத்தியசாலைக்கு அருகாமையில் மேற்படி கிளைமோர் தாக்குதல் நடந்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் தாயகத்தில் படைத்தரப்பு உருவாக்கியுள்ள நெருக்கடி குறித்து புலிகள் சரியான முடிவெடுப்பர்

## நோர்வேத் தூதுவரைச் சந்தித்த பின்னர் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி, ஜன.18

தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஒரு நெருக்கடியான சூழலை படைத் தரப்பு உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இதனை எமது தலைமைப் பீடம் நன்கு அவதானித்துக் கொண்டிருக்கிறது.

அடுத்த வாரம் வருகைதரும் நோர்வேயின் உயர்மட்டக்குழுவை எமது தலைவர் சந்திக்கவுள்ளார். அதன்போது வடக்கு - கிழக்கில் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைகள் தொடர்பாக விளக்கப்படும். அத்துடன், இது விடயமாக எமது தலைமைப் பீடமும் ஒரு சரியான நிலைப்பாட்டை எடுக்கும்.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்றுமுற்பகல் 11 மணிக்கு நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரை விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் சந்தித்துப் பேசிய பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே தமிழ்ச்செல்வன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவருடைய செவ்வியின் விவரம் வருமாறு:-

* *கேள்வி:-* இன்றைய சந்திப்பில் என்ன பேசப்பட்டது?

* *பதில்:-* தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமைகள் தொடர்பாக நாம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

(02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொலிகண்டிக் கடல் பகுதியில் மீனவரை நோக்கி பீரங்கித் தாக்குதல்

கரவெட்டி,ஜன.18

வடமராட்சி பொலிகண்டிக் கடல் பகுதியில் நேற்று மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டனர் என்று கூறப்பட்டது.

நேற்று அதிகாலை 5.15 மணியளவில் பொலிகண்டி கடலில் தொழிலுக்குச் சென்ற மீனவர்களின் படகுகளை நோக்கி, ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டனர் என்றும்-

பொலிகண்டிக் கடற்பகுதி, வல்வெட்டித் துறைக் கடற்பகுதி ஆகியவற்றில் தொடர்ந்து தொழில் செய்ய செல்லக் கூடாது என்று கடற்படையினரால் மீனவர்கள் அச்சுறுத்தப்பட்டனர் என்றும் -மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வல்வெட்டித்துறை, உதயசூரியன் கடற்கரைப் பகுதிக்கு அண்மையில் உள்ள இராணுவக் காவலரண் மீது கிரனேட் வீச்சு நடத்தப்பட்டது. இதனால், அப்பகுதியில் சில மணி நேரம் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. (3-6-70)

# இலங்கை 94 ஓட்டங்[களா]ல் தென்னாபிரிக்காவை வென்றது

வி.பி.கிண்ணத்துக்காக போட்டியின் மூன்றாவது ஆட்டத்தில் நேற்று இலங்கையும், தென்னாபிரிக்காவும் மோதின. இதில் 94 ஓட்டங்களால் இ[லங்]கை அணி வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் முதலில் 6 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணிசார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய முபாரக் 61 ஓட்டங்களையும், குமார்சங்கக்கார 88 ஓட்டங்களையும், அணித்தலைவர் மார்வன் அத்தப்பத்து ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களையும் பெற்றனர். அடுத்துக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, இலங்கை அணி வீரர்களின் பந்து வீச்சுக்கு முகம் கொடுத்து ஓட்டங்களைப் பெற முடியாது திணறினர்.

இறுதியில் 44.2 ஆவது ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 188 ஓட்டங்களை மட்டும் பெற்று 94 ஓட்டங்களால் தோல்வியடைந்தது தென்னாபிரிக்கா. (3-6)

# புலிகளின் உத்தரவுப்படி வன்னி செல்ல மறுத்ததால் அவர்களே போஜனின் குடும்பத்தைக் கொன்றனர்

## மானிப்பாய் படுகொலை குறித்து ஈ.பி.டி.பி. விளக்கம்

கொழும்பு, ஜன.18

புலிகளின் எச்சரிக்கைக்கு எடுபட்டு வன்னிக்குப் போக மறுத்ததால்தான் போஜன் குடும்பத்தினர் மானிப்பாயில் வைத்து புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சாரப்பட அறிக்கை வெளியிட்டிருக்கின்றது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.).

இவ்விடயம் தொடர்பாக 'படுகொலைகளை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது' - என்ற தலைப்பில் அக்கட்சி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மானிப்பாய் முதலியார் வீதியில் 16ஆம் திகதியன்று அதிகாலை 12.30 மணியளவில் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட போஜன் அர்த்தநாரீஸ்வரி, போஜன் ரேணுகா, போஜன் சானுகா ஆகியோரின் படுகொலைகளை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது. புலிகளின் கொடூரமான தாக்குதல்களில் பலியானவர்களும், காயப்பட்டவர்களும் ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசனின் உறவினர்கள் என்பதைக் கவலையோடு தெரிவித்துக் கொள்கிறோம். புலிகளின் எச்சரிக்கைக்கு எடுபட்டு வன்னிக்குப் போக மறுக்கும் மக்கள் மீது இவ்வாறான படுகொலைகளைப் புலிகள் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர் என்பதை யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் படுகொலைகள் உணர்த்துகின்றன.

படுகொலைகளைப் புரிந்த புலிகள், பழியை ஈ.பி.டி.பி. மீது சுமத்துவதில் காட்டிய அவசரமானது, புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியின் பெயரால் 'உதயன்' பத்திரிகையில் 17.01.2006 அன்று வெளியாகியிருந்த செய்தியின் மூலம் வெளிப்படுகிறது.

ஈ.பி.டி.பி.யைப் பொறுத்தவரை அது என்றைக்குமே கொலைகள் மீது நம்பிக்கை கொண்டிருப்பதில்லை. தவிரவும், கொலைகளால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதில் ஈ.பி.டி.பி. உறுதியாக உள்ளது. புலிகளால் எமது உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டு வருகின்ற போதும் நாம் கருத்துக்கள் மீதான நம்பிக்கையை கைவிட்டுச் செயலாற்றுபவர்கள் அல்லர்.

எவர் மீது புரியப்பட்டாலும் படுகொலைகளை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கின்றது. ஆகவே புலிகள் படுகொலைகளைக் கைவிடுவதோடு, சேறு பூசும் நடவடிக்கைகளையும் கைவிட்டு நிரந்தர சமாதானத்திற்காகவும், மக்களின் அமைதி வாழ்வுக்காகவும் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளில் அர்ப்பணிப்போடு செயலாற்ற வேண்டுமெனவும் ஈ.பி.டி.பி. கேட்டுக்கொள்கிறது.- இப்படி அதில் உள்ளது. (க-3)

# மன்னாரில் கைக்குண்டு வீச்சு ஒருவர் பலி; இருவர் காயம்!

மன்னார்,ஜன.18

மன்னார் வைத்தியசாலைக்கருகில் நின்றிருந்த இராணுவத்தினர் மீது நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன், இன்னொரு சிப்பாய் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தின் பின்னர் அங்கு குவிக்கப்பட்ட இராணுவத்தினர் கவச வாகனங்கள் சகிதம் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக சல்லடை போட்டு தேடுதலை மேற்கொண்டனர். இச்சம்பவத்தின் பின்னர் அப்பகுதியெங்கும் இருபது நிமிடங்களுக்கு மேலாக கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது எனவும் இதனால் அப்பகுதியெங்கும் பெரும் பதற்றம் நிலவியது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# திருமலையில் கிளைமோரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரின் பஸ்ஸை இலக்கு வைத்தே மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கடற்படையினருக்கு உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. இச்சம்பவத்தையடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பொதுமக்கள் இருவர் பலியாகியுள்ளனர்.

மரணித்த இருவரில் ஒருவர் செல்வநாயகபுரத்தைச் சேர்ந்த - 23 வயதுடைய செல்லத்துரை செல்வராஜா என்ற மேசன் தொழிலாளியாவார்.

வேலை செய்து கொண்டு நின்றஇவர், மூன்றாம் கட்டை சந்தியிலுள்ள 'ஹார்ட்வெயார்' கடையில் சில பொருள்களை வாங்குவதற்கு வந்த சமயமே மேற்படி சம்பவத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

பலியான மற்றுமொருவர் 60 வயது மதிக்[கத்த]க்கவர் .அவரும் மேசன் வேலை புரிபவர் [என] பொதுமக்கள் தெரிவித்தனர். ஆனால் அவரின் [உறவின]ர் எவரும் வைத்தியசாலைக்கு வந்திருக்கவில்லை. அவர் வசிக்கும் செல்வநாயகபுர பிரதேசம் நேற்று இராணுவத்தினரின் சுற்றிவளைப்புக்கு உள்ளாகியிருந்ததால் உறவினர்கள் அதைத் தாண்டி வைத்தியசாலைக்கு வரமுடியாத நிலைமை பிற்பகல் வரை நீடித்தது.

மரணித்த செல்வராஜா என்ற இளைஞனுடன் ரஜனிக்காந்த் என்ற மற்றுமொரு இளைஞனும் நின்றிருந்தார். படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பயந்து அருகில் உள்ள கடைக்குள் அவர் புகுந்துள்ளார். கடைக்காரரே பயத்தினால் அந்த இளைஞர் உள்ளே இருக்கத்தக்கதாக கடையை மூடிவிட்டு ஓட்டம் பிடித்துள்ளார். பின்னர் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் வந்தே கடைப் பூட்டை அறுத்து இளைஞனை மீட்டுள்ளனர்.

மேலும், இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் ரி.ஏ.சந்திரசேன(வயது - 38), ஏ.ஜே.இ.பிரேமதாஸ் (வயது -36), தேவதர்ஷன் (வயது - 20), கதிரமலை துவாரகா (வயது45), கணேஷ் சரஸ்வதி(வயது 45) செபஸ்தியன் டேவிட்(வயது 35) ஆகிய 6 பொதுமக்கள் காயமடைந்தனர். அதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை படையினரின் சூட்டில் இறந்த இருவரையும் புலிகள் என்று குறிப்பிட்டுள்ள பொலீஸ் தரப்பு, அவ்விருவரையும் செல்வநாயகபுரம் வரையும் துரத்திச் சென்று படையினர் சுட்டனர் என கூறியுள்ளனர். ஆனால், மூன்றாம் கடைச்சந்தியிலேயே இவர்களின் சடலங்கள் கிடந்துள்ளன என பொதுமக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மேற்படி சம்பவத்தை அடுத்து திருகோணமலை மடத்தடிப் பகுதியில் தமிழரின் கடை ஒன்றினுள் கைக்குண்டு வீசப்பட்டதில் கடையில் இருந்த தமிழ் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதற்கிடையில் திருமலைச் சம்பவங்கள் குறித்து 'திருகோணமலை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை[]யணி' என்ற பெயரில் நேற்று ஓர் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது.

'தமிழ் மக்கள் மீதான வன்முறையாளர்களே இது உங்களின் கவனத்திற்கு!' - என்ற தலைப்பில் வெளியான அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

இன்று (செவ்வாயன்று) திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா இராணுவத்திற்கெதிரான கிளைமோர் தாக்குதலை திருகோணமலை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படையணி ஆகிய நாமே மேற்கொண்டோம். இது திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் மீது தொடர்ந்து இடம்பெற்றுவரும் வன்முறைகளுக்கு சாத்வீக முறையில் நடத்தப்பட்ட போராட்டங்கள் மூலம் தீர்வு கிட்டாததாலேயேமேற்கொள்ளப்பட்டது.

இனிமேலும் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுமாயின் இத்தாக்குதலை விரிவுபடுத்த நாம் திட்டமிட்டுள்ளோம். - என்று அதில் உள்ளது. (க-3-151)

# வேலணைக் கடலில் மீனவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம்,ஜன.18

வேலணைக் கடலில் கடற்றொழிலுக்கு நேற்று அதிகாலை சென்ற இளம் மீனவர் ஒருவர் காலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அதிகாலை 3 மணியளவில் கனகசபை காந்தரூபன் (வயது 23) என்ற மீனவர் தனியாக மீன்பிடிக்க தொழிலுக்குச் சென்றார் என்றும் -

பின்னர் காலை 6 மணியளவில் இவரது படகு தனியாகச் செல்வதை அவதானித்த மீனவர்கள் அருகே சென்று பார்த்தபோது குறித்த நபரின் சடலம் மிதப்பதை அவதானித்து அவர்கள் உடனடியாக உறவினருக்கு தகவல் தெரிவித்தனர் என்றும் - இறந்தவரின் தந்தை தெரிவித்தார்.

இவருக்கு வலிப்புநோய் இருப்பதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறைப் பொலீஸார் சடலத்தை நேற்றுப் பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (3-12-13-190)

# படை அட்டூழியங்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்பக்க வழியாகவே எடுத்துவந்து சபாபீடத்தில் வைத்தார்.

இதனையடுத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து எம்.பிக்களும், இதர தமிழ் எம்.பிக்களான பெ.சந்திரசேகரன், மனோ கணேசன், பெ.இராதா கிருஸ்ணன், எம். எஸ். செல்லச்சாமி, முத்துசிவலிங்கம், வி.புத்திரசிகாமணி, எஸ்.ஜெகதீஸ்வரன், தி.மகேஸ்வரன் ஆகியோரும் சபாநாயகர் முன்னிலையிலுள்ள சபாபீடத்துக்குஅருகில் வந்தனர்.

இதன்போது நிலைமை பாரதூரமாவதை உணர்ந்த சபாநாயகர்,செங்கோலைத் தூக்கி தனது மேசையின்மீது வைக்குமாறு படைக்கல சேவிதரைப் பணித்ததுடன், அமைதியாக இருக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பணித்தார்.

''ஜோஸப் எம்.பியின் படுகொலைக்கு அரசே பொறுப்பு'',''வடக்கு-கிழக்கு படுகொலைகளுக்கு அரசே பொறுப்பு'', ''மானிப்பாய் படுகொலையில் அரசுதான் பின்னணி'', ''டக்ளஸைக் கூட்டி வா'', ''போர் என்றால் போர்'', ''புலிகளைத் தீண்டாதே!'' என்றெல்லாம் மிகுந்த சத்தத்துடன் கோஷங்கள் எழுப்பப்பட்டதால் சபை அலுவல்களை பத்து நிமிடங்களுக்குத் தாம் ஒத்திவைக்கின்றார் என சபாநாயகர் முதலில் அறிவித்தார்.

இதனையடுத்து 9.45 மணிக்கு சபாநாயகரின் அறையில் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. ஆனால் தமிழ் எம்.பிக்கள் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்துவிட்டு நாடாளுமன்றுக்குள் தரையிலே அமர்ந்திருந்து தொடர்ந்து எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினர்.

சுமார் 45 நிமிடங்களுக்குப் பின்னர் சபை மீண்டும் கூடியபோது, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் அமளியில் ஈடுபட்டனர். சபை அலுவல்களை முன்னெடுப்பதற்காக சபாநாயகர் பகீரதப்பிரயத்தனங்களை மேற்கொண்ட போதும் அது கைகூடவில்லை.

இதனால் வேறுவழியின்றி சபை அலுவல்களை இன்றுகாலை 9.30 மணிவரைக்கும் ஒத்திவைக்கிறார் என சபாநாயகர் அறிவித்தார்.

சபை ஒத்தி[வை]க்கப்பட்ட பின்னரும் தமிழ் எம்.பிக்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். ஜே.வி.பியினர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த[ா] [illegible] சூடான வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதையும் கேட்கமுடிந்தது. (க-3)

# தமிழர் தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து எமது அப்பாவி மக்கள் படு கொலை செய்யப்படுகிறார்கள். இராணுவத்தினரின் நெருக்குவாரங்களும், அச்சுறுத்தல்களும் அதிகரித்துள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். மிக மோசமான நிலை ஒன்று உருவாகிக் கொண்டிருப்பதை நாம் தெளிவாக நோர்வேத் தூதுவருக்கு எடுத்துக் கூறியுள்ளோம்.

✱ கே:- தற்போது ஏற்பட்டுள்ள மோசமான நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? அது பற்றிக் கலந்து பேசினீர்களா?

● ப:- யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுலாக்குவதுதான் எல்லாவற்றுக்கும் சரியான தீர்வு. முதலில் ஓர் இயல்புநிலை தோற்றுவிக்கப்படவேண்டும். இராணுவ நெருக்குவாரங்கள் குறைக்கப்படவேண்டும். இதனைச் செய்வதன் மூலமே நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம். இராணுவத்தினரின் காடைத்தனம் நிறுத்தப்பட்டால் மட்டுமே மக்களின் கொந்தளிப்பை முடிவுக்குக் கொண்டுவரமுடியும்.

✱ கே:- நோர்வேத் தூதுக்குழு இலங்கைக்கு வரும்போது ஒரு திருப்பம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. அவ்வாறான ஒரு திருப்பம் ஏற்படாவிட்டால் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

● ப:- நோர்வேயின் உயர்மட்டக்குழு அடுத்தவாரம் இங்குவருகின்றது. இந்தக் குழுவினர் எமது தலைவரைச் சந்திக்கவுள்ளனர். அந்தவேளையில் எமது நிலைப்பாட்டைத் தலைவர் எடுத்து விளக்குவார். ஆனால், தெற்கிலே ஏற்பட்டு வருகின்ற சூழல், அவர்களது நிலைப்பாடு, எமது தாயகப் பிரதேசத்தில் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துமோ என்பது சந்தேகமாகவே உள்ளது. அவ்வாறானதொரு நிலைதான் இப்போது உருவாகிக் கொண்டிருக்கின்றது. இலங்கைப் படைத் தரப்பு தமது நிலைப்பாட்டில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவந்தால் மட்டுமே நிலைமைகள் சீராகும்.

✱ கே:- பேச்சுக்கான சூழல் அருகிப் போய்கொண்டிருக்கிறது. சில சமயத்தில் ஒஸ்லோவில் பேச அரசு ஒப்புக்கொண்டாலும்கூட சுமுகநிலை ஏற்படாமல் பேச்சுக்கான சாத்தியம் ஏற்படுமா?

● ப:- மிகவும் நெருக்கடியான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. நிலைமைகளை எமது தலைமைப் பீடம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. நோர்வே உயர்மட்டக்குழுவினருடனான சந்திப்பின் போது எமது தலைமைப் பீடம் இது தொடர்பான சில நிலைப்பாட்டை எடுக்கும்.

✱ கே:- நோர்வேத் தூதுக் குழுவினருடனான சந்திப்பின்போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கலந்துகொள்வாரா?

● ப:- ஆம். அவரும் கலந்து கொள்வார்.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (க-3-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# மீண்டும் யாழ். குடாநாட்டிலிருந்து பெரும் ஜனத்திரள் இடம்பெயர்வு?

1995 இறுதியில் யாழ். குடாநாட்டிலிருந்து பல லட்சம் மக்கள் ஒரே நாளில் இடம்பெயர்ந்த 'பெரும் ஜனத்திரள் வெளியேற்றம்'' (Mass Exodus) மீண்டும் மனதில் நிழலாடும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

யாழ். குடாநாட்டை அரசுப் படைகள் 1995 இறுதியில் திரும்பவும் கைப்பற்றிய போது ஆட்களே இல்லாத மயான நகரைத்தான் அப்படைகளால் சந்திக்க முடிந்தது. சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தமிழர் தாயகத்தின் தலையாக அமைந்த யாழ்.குடாநாட்டின் தமிழர்கள் அளித்த பதில் அதுதான். தென்னிலங்கை அரசின் படைகளை ஆக்கிரமிப்பு இராணுவமாகக் கருதி அவர்கள் அளித்த வரவேற்பு அது.

1996 ஏப்ரலில் யாழ். குடாநாட்டை முழுதுமாக ஆக்கிரமித்தது இலங்கைப் படை.

சுமார் பத்தாண்டுகள் கழித்து நிலைமை மீண்டும் பழைய தற்குத் திரும்புமாற்போல தோன்றுகின்றது.

மீளவும் ஒரு பெரும் மக்கள் இடம்பெயர்வுக்குக் கட்டியம் கூறுவது போல, ஜனநகர்வு ஆரம்பமாகிவிட்டது.

யாழ். குடாநாட்டின் அதிகாரவலு கைமாறும் நிலைமை வந்தபோது ஓர் இடம்பெயர்வு ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் நிகழ்ந்தது. இப்போதும் அப்படி ஒரு கைமாறும் நிலையை எதிர்பார்த்துத்தான் இடம்பெயர்வு தொடங்கியிருக்கின்றது.

இந்த மக்கள் இடம்பெயர்வின் திசை - அல்லது நகர்வுப் போக்கு - அப்போதும் இப்போதும் ஒரே பக்கத்தை நோக்கியதாகத்தான் இருக்கிறது. ஆனால், அதற்கான நோக்கம் மட்டும் அப்போதைக்கும் இப்போதைக்கும் வெவ்வேறானவை என்பதுதான் உண்மை.

அப்போதும் யாழ். குடாநாட்டிலிருந்து மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வன்னிக்கு இடம்பெயர்ந்தார்கள். இப்போதும் மக்கள் யாழ். குடா நாட்டிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் வன்னிக்கே இடம்பெயர்கின்றார்கள்.

ஆனால், அப்போதும் யாழ். குடா நாட்டை அரச படைகள் ஆக்கிரமிக்கப் போகின்ற நிலையில் அந்த அதிகாரத்துக்குள் சிக்காமல் தவிர்க்கும் நோக்கில் - தமக்குப் பாதுகாப்பும், சுதந்திரமான - சுயாதீனமான - வாழ்வை உறுதிப்படுத்த வேண்டியும் மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இப்போது இடம்பெயரும் மக்களின் நோக்கத்திலும் இலக்கிலும் சற்று வேறுபாடு உள்ளது.

யாழ். குடாநாட்டின் அதிகாரம் மீண்டும் கைமாறக் கூடிய நிலைமை ஏற்படுவதைத் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். அதில் சந்தேகமில்லை. அதற்கான சாத்தியத்தை அவர்கள் உணர்கிறார்கள். ஆனால், அந்த அதிகார மாற்றத்துக்காக நிகழக் கூடியகள மோதல்களின் நடுவே சிக்க அவர்கள் விரும்பவில்லை. அது மாத்திரம் அல்ல, அத்தகைய நிலைமை ஏற்படும்போது கட்டுப்பாட்டை இழக்கும் தரப்பு அந்த ஆதங்கத்தில் - விரக்தியில் - புரியப்போகின்ற கொடூரச் செயல்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் முகம் கொடுக்காமல் தவிர்ப்பது மக்களின் முன்னெச்சரிக்கைப் பாதுகாப்பு எண்ணமாக இருக்கின்றது.

விரக்தியின் விளிம்பில் இருக்கும் அரசுப் படைகள் நிலைமை அவற்றுக்கு எதிராக மேலும் மோசமடையும்போது எப்படி நடந்து கொள்ளும், எப்படி நடந்து கொள்ளப் போகின்றன என்பதற்கு இப்போது யாழ்.குடாநாட்டில் நடக்கும் சம்பவங்கள் நல்ல முன்னுதாரணங்கள்.

அவை ஏற்படுத்திய அதிர்ச்சியும், பீதியும் இயல்பாகவே மக்கள் இடம்பெயர்வைத் தூண்டி நிற்கின்றன என்பதும் புலனாகின்றது.

யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் படையினரின் கெடுபிடி நடவடிக்கைகள், பெரும்பாலான மக்களின் அன்றாட ஜீவனோபாயத்துக்கான வழிகளை அடைத்து விட்டிருப்பதும் இடம்பெயர்வுக்கான மற்றொரு காரணமாக அமைந்திருக்கின்றது.

பாதுகாப்புக்காகவும், சுதந்திரமான வாழ்வுக்காகவும் மட்டுமன்றி வயிற்றுப் பிழைப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் கூட மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கிச் செல்கின்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

படைக் கெடுபிடிகள் காரணமாக குடாநாட்டில் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி பயிலவும், ஆசிரியர்கள் கல்வி போதிக்கவும் கூடியதான நிலைமை தோன்றும்வரை கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்துவது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்திருக்கின்றது.


யாழ். பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதால் இடம்பெயர்வோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை.

யாழ். குடாநாட்டிலிருந்து ஆயிரக்கணக்கில் - பெரும் எண்ணிக்கையில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்துக்கு மக்கள் இடம்பெயரத் தொடங்கியிருப்பதால் அவர்களை வரவேற்று, உரிய இடங்களில் தங்க வைத்து, அவர்களின் அன்றாட - அவசிய - தேவைகளை நிறைவு செய்யும் பெரும் மனிதாபிமான் பொறுப்பு அப்பிரதேசத்தை நிர்வகித்து வரும் புலிகளின் தலையில் சுமையாக விழுந்திருக்கின்றது.

இடம்பெயரும் இந்த மக்களின் அவசர - அவசிய - தேவைகளை நிறைவு செய்யும் செயற்பாட்டுக்கு அரசுத் தரப்பை நம்பியிருப்பதில் அர்த்தமில்லை என்பதும் தமிழர் தரப்பின் அனுபவப் பாடம்.

புலிகள் இந்தப் பணியை செவ்வனே முன்னெடுப்பதற்கு அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும், வெளிநாடுகளில் வதியும் ஈழத் தமிழர்களுமே உரிய முறையில் உதவி, ஒத்தாசைகளை வழங்க முடியும்.

இந்நிலைமை பற்றிய இந்தத் தகவல் இந்த இரு தரப்பினருக்கும் - சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களுக்கும், புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும்.- சமர்ப்பணம்.




பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் நிறைவைய்தியதை ஒட்டிய நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது. இதில் வணிக முகாமைத்துவபீடப் பீடாதிபதி க.தேவராஜா பொதுச்சுடர் ஏற்றுவதையும் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பொங்குதமிழ் பிரகடன நினைவுப் பட்டயத்துக்கு மலர்மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் : நேசன்)

# 'பொங்குதமிழ்' 5ஆம் ஆண்டு நிறைவு பல்கலை. வளாகத்தில் சிறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.18

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று முற்பகல் 10.30மணியளவில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடனப் பெயர்ப் பலகை நிறுவப்பட்டுள்ள இடத்தில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி எஸ்.பகீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி க. தேவராஜன் ஏற்றி வைத்தார்.

அகவணக்கத்தை அடுத்து, பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடனப் பெயர்ப் பலகைக்கு மலர் மாலையை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் அணிவித்தார். துணைவேந்தரும் மாணவ பிரதிநிதிகளும் உரையாற்றினர். இந்நிகழ்வில் பல்கலைக்கழக கல்விசார்ந்த, கல்வி சாராத ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் முதலாவது பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ். பல் கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-13-12-86)

# சமாதானப் பேச்சை உடன் ஆரம்பிக்க ஐ.நா.செயலாளர் நாயகம் கோரிக்கை

இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் உடனடியாக நேரடிப் பேச்சுகளை ஆரம்பிக்கும்படி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் வலியுறுத்தியுள்ளார்.

அதிகரித்து வரும் வன்முறைகள் மற்றும் யுத்த அச்சம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

படுமோசமான நிலைமையை அடைந்துள்ள இலங்கையின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக தான் மிகுந்த கவலையடைகிறேன். கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்காணிப்புக் குழு அலுவலகம் மீதே தாக்குதல் இடம் பெற்றுள்ளமை வேதனையளிக்கிறது.

நாட்டு மக்களுக்கு ஒரு புதிய சகாப்தத்துக்கான நம்பிக்கையையும் கடந்த நான்கு வருடகாலமாக கணிசமான பயன்களையும் அளித்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. மீண்டும் தொடங்கியுள்ள இந்த வன்முறைகள் திரும்பவும் பொதுமக்களுக்கு கடுமையாக அனுபவங்களைக் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

மீண்டும் யுத்தத்துக்கு திரும்புவது இரு தரப்பினருக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை.

ஆகவே, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உறுதிசெய்து, அதன் மூலம் மனித உரிமைகளுக்குப் பாதுகாப்பும் மரியாதையும் அளித்து நேரடி சமாதானப் பேச்சுகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் - என்று அனான் கூறியுள்ளார். (ஓ)

# உரும்பிராயில் சுடப்பட்டவர் திருமலையைச் சேர்ந்தவர்

யாழ்ப்பாணம்,ஜன.18

நேற்றுமுன்தினம் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு முன்பாகக் காணப்பட்ட சடலம் சுப்பையா முருகன் என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்தவரான இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். தற்போது நாவற்குழி வீட்டுத் திட்டத்தில் வசித்துவந்தார். உரும்பிராயிலுள்ள உணவகம் ஒன்றில் சமையலாளராக வேலைசெய்தார்.

நேற்றுமுன்தினமிரவு 8.30 மணியளவில் உணவகத்தில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அவரை இனந்தெரியாத நபர்கள் சுட்டுக்கொன்றனர். நேற்று அதிகாலை 2 மணியளவில் சம்பவ இடத்துக்குச் சென்று யாழ். நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

பின்னர் யாழ். போதனா வைத்திய சாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (ஓ-202)

**உதயவாக்கு**

தக்கவேளையில் சொன்ன சொல்லானது வெள்ளித் தட்டில் வைத்த பொற்கனிக்குச் சமம்.
சாலமோனின் நீதி மொழி(விவிலியம்)

**நாளை**

தை 6
வியாழக்கிழமை
19.01.2006
திதி: பஞ்சமி
பின்னிரவு: 01.30 வரை
நட்சத்திரம் : பூரம்
காலை : 7.58 வரை
சுபநேரம் : 08.05 - 09.35
ராகுகாலம் : 02.05 - 03.35
(யாழ் மத்திய நேரப்படி)

# படையினரின் கெடுபிடிகளால் கும்பாபிஷேகம் ஒத்திவைப்பு

வலி.மேற்கு,ஜன.18

காரைநகர், தோப்புக்காடு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் படையினரின் கெடுபிடியால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சுமார் 20 வருடங்களுக்குப் பின்னர் இக்கிராமத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்தனர். சேதமடைந்திருந்த சுப்பிரமணிய சுவாமி ஆலயம் இவ்வூர் மக்களால் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. ஆலயப் பரிபாலன சபையினர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர். இயந்திர பூசையும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் கடற்படையினர் இக்கிராமத்தைச் சுற்றி காவலரண்களை ஏற்படுத்தியுள்ளனர். கடந்த சில நாள்களாகக் கடற்படையினர் சோதனை நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள்ளனர். இதனால் இக்கிராம மக்கள் இடம் பெயர்ந்து வன்னி மாவட்டத்துக்கும் யாழ். மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களுக்கும் சென்று கொண்டிருக்கின்றனர். இதனால் ஆலய பரிபாலன சபையினர் இயந்திர பூசையை நிறுத்தியதுடன் மகாகும்பாபிஷேகத்தையும் ஒத்திவைத்துள்ளனர்.

ஆலயத்தின் விக்கிரகங்களும் பெறுமதியான பொருள்களும் பாதுகாப்புக் கருதி வட்டுக்கோட்டையிலுள்ள ஆலயம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளன. (ஓ-175)

# உணவகங்களின் குறைபாடுகள் குறித்து தகவல் தருமாறு மக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.18

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உணவகங்களில் உணவு உண்பவர்கள் கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் குறித்து மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சிவகணேசன் அறிவுறுத்தியுள்ளார்.

ஒவ்வொரு பொதுமகனும் உடல் ஆரோக்கியத்தைப் பேண வசதியாக உணவகங்களில் சுகாதார நடைமுறைகள் பேணப்படுவதை உறுதி செய்து கொள்ள உதவுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காத உணவகம் குறித்து மானிப்பாய் பிரதேச சபைக்கு அல்லது அப்பகுதிப் பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அறியத்தரவேண்டும் என மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

உணவகத்தின் சுற்றுச்சூழல் துப்புரவின்மையாக இருத்தல், பயன்படுத்தப்படும் உபகரணங்கள் தூய்மையற்றுக் காணப்படல், கைகழுவும் இடத்தில் சவர்க்காரம் வைக்கப்படாமை, கடமையில் ஈடுபடும் ஊழியர்கள் புகைத்தல், வெற்றிலை, பாக்கு மெல்லுதல் பணியாளர் சுகாதாரமற்றுக் காணப்படல், உணவு பரிமாறுபவர் நோய் அறிகுறியுடன் காணப்படல், கேட்கப்படும் உணவுகள் மட்டும் வழங்கப்படாமை, இடுக்கிகள் மூலமாக உணவுகள் எடுக்கப்படாமை, வெளிநபர் ஒருவர் உணவு அலுமாரியினுள் உணவு எடுத்தல், வழங்கப்படும் உணவுப் பொருள்கள் அச்சிடப்பட்ட தாளில் பொதிசெய்யப்பட்டிருத்தல், முறையான விலைப்பட்டியல் இடப்படாமை ஆகிய சுகாதாரமற்ற நடவடிக்கைகள் குறித்து மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலியில் விளையாட்டு மைதானம்

நவாலி சென்ற் பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு மைதானம் உருவாக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் அனுசரணையுடன் புதிய விளையாட்டு மைதானம் நவாலி தெற்குப் பகுதியில் அமைக்கப்படவுள்ளது. நவாலி சென்ற் பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் மாவட்ட மட்டத்தில் உதைபந்தாட்டத்தில் குறிப்பிடத்தக்க அணியாக உள்ளபோதும் இதுவரை மைதானம் இன்றி உள்ளமை பெருங்குறையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-185)


## ஜயோதர

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6466815 முதல் 6476736 வரை. சீட்டிழுப்பு இல. 203 திகதி 16-01-2006

வெற்றி எண்கள்

2 8 8 2 7 0 சுப்பர் எண் 08

ஜக்பொட் பரிசு ரூ. 15,513,700/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 15,513,700/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 0 | 1,000,000/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 88 | 5,000/= | 440,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 875 | 500/= | 437,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8733 | 50/= | 436,650/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 86550 | 10/= | 865,500/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 90 | 1,000/= | 90,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 872 | 100/= | 87,200/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8658 | 20/= | 173,160/= |
| | | மொத்தம் ரூ. | 3,025,010/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 3,627,610/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 6473135-3-56 |
| மொனராகல | 6476051-2-86 |
| களுத்தறை | 6470121-3-90 |
| அம்பாறை | 6471800-7-35 |
| நுவரேலியா | 6475414-8-92 |
| திருகோணமலை | 6469305-5-20 |
| குருணாகல் | 6469641-1-88 |
| புத்தளம் | 6467774-1-13 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 15,756,550/-

தொடர் இல. 7389501 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஜனவரி 19 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## மகப்பேறு நிலையம் புனரமைப்பு

யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள மகப்பேறு நிலையத்தை புனரமைப்பதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் எட்டுலட்சம்ரூபாவை யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானத்திடம் வழங்கியுள்ளது.(ஒ-190)

## சமுர்த்தி பயனாளிகளுக்கு தென்னங்கன்று

யாழ். பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தினால் யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி பிரிவிற்கு உட்பட்ட பயனாளிகளுக்குமானிய அடிப்படையில் தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொழும்புத்துறை சந்தன மாதா ஆலய முன்றிலில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். பிரதேச செயலாளர் பற்றிக்டிறஞ்சன், முகாமைத்துவ பணிப்பாளர் ம.கீயூமன், யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி அ.பிரபாகரன், கருதிட்ட முகாமையாளர் திருமதி விக்கினேஸ் ஜெயசோதி, சமுர்த்தி முகாமையாளர் எஸ். ராகவன் சமுர்த்தி மேற்குவங்கிமுகாமையாளர். சா. கிருஸ்ண ராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-190)

## கண்ணீர் அஞ்சலி



எமது கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்

**சுப்பிரமணியம் ஜெயரட்ணம்**

அவர்கள் 17.01.2006 அன்று செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்த செய்திகேட்டு கலங்குவதுடன் அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மக்கள் வங்கி
பிரதேச தலைமைக்காரியாலயம்,யாழ்ப்பாணம்.

(சி-47400)(21.15.11)


## வேல்ஸ் இளவரசி வைத்தியசாலை

24 மணிநேர சேவையை மேம்படுத்த பின்வரும் சேவைகளுக்குத் தகுதியானவர்கள் தேவை

விசேட சலரோகம் பற்றிய ஆலோசனையும் அறிவுரையும்

பதிவு செய்யப்பட்ட மருந்து கலவையாளர்-பகுதி/முழு நேரம் (Registered Pharmacist)

பதிவு செய்யப்பட்ட தாதியர் - பகுதி/முழு நேரம் (Registered Nurses)

தாதிப் பயிலுநர்கள் (ஆண்/பெண்) (Nursing Trainees)

வரவேற்பாளரும் இயக்குநரும் (Receptionist cum Telephonist)

காசாளர் (Cashier)

வைத்தியசாலைச் சிற்றூழியர்கள் (ஆண்/பெண்) (Hospital Attendants)

விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வி மற்றும் தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 21.01.2006 சனி காலை 10.30 மணிக்கு நேர்முகத்தேர்வுக்கு சமுகம் தரவும்.

வைத்திய இயக்குநர்.
132. கச்சேரி நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்.



care

**சுனாமிக்கு பின்னான சமூக அபிவிருத்தியும் மீள்கட்டமைப்பும்**

**கெயர் சர்வதேசம் யாழ்ப்பாணம்- 2006**

## கேள்விப் பத்திரம்

கெயர் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கட்டட வேலைத்திட்டங்களுக்கான கேள்விப்பத்திரங்களை பருத்தித்துறை திட்டப் பிரதேசத்துக்கு விநியோகிப்பதற்கு தகுதியான விநியோகஸ்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கட்டடத் தொழிலாளிகள் (மேசன், கூலியாள்கள், தச்சுத்தொழிலாளிகள்)
2. மாதாந்த வாடகையில் ஹண்டர் (1.5 கியூப் 450 கொள்ளளவு)
3. கதவுகளை, கூரைகளை பொருத்துவதற்கான லப்பொருள்கள் (பிணைச்சல், பூட்டு, ஆணிகள்)
4. ஸ்கொட்டிங் பான், பி.வி.சி பைப்.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களை பெறுவதற்கும், பருத்தித்துறையிலுள்ள கெயர் அலுவலகத்துடன் 8.30 தொடக்கம் 4.30 வரையான கடமைநேரத்தில் தொடர்பு கொள்ளவும். சாரையடியில், விண்ணப்ப முடிவு திகதி 27.01.2006

**கெயர் சர்வதேசம்,**
**சாரையடி, பருத்தித்துறை.**
*தொலைபேசி 021 - 2264259*

(45447)(21.15.34)


## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்குரிய பங்குத்தந்தை அருட்பணி A.P அன்ரனிப்பிள்ளை அடிகளாரின் பாசமிகு தந்தை

**மடுத்தீன்அந்தோனிபர்னாந்து**



அவர்களின் பிரிவால் துயருறும் எம் பங்குத்தந்தை மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆன்மா இறை மகிமையில் இளைப்பாற இறை அருளை வேண்டுகிறோம்.

பங்கு மக்கள்,
புனித செபமாலை மாதா ஆலயம்,
உடுவில்.

(45448)(21.15.34)

## மரண அறிவித்தல்

### தம்பு நாகேஸ்வரி

கந்தரோடை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நாகேஸ்வரி சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனர் தம்பு-வள்ளியம்மை தம்பத்தியரின் சிரேஷ்ட புதல்வியும்சுப்பிரமணியம் (உள்ளூராட்சி சேவை ஓய்வூதியர்) பரமேஸ்வரி குகராஜன் (இளைப்பாறிய ஆசிரியை)காலஞ்சென்ற மனோன்மணி விநாயகமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் சகோதரனின் கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு இல்லத்தில் இன்று(18.01.2006)புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.சுப்பிரமணியம் (சகோதரன்).
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(45449)(21.15.34)


முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

# Computer Hardware Engineering Course

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

**உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி**

◊Assembling ◊Upgrading ◊Troubleshooting ◊Fault Finding ◊Repairing ◊Servicing ◊Software Installation ◊Configuring ◊Introduction to Networking

*Course Contents*

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
23/01/2006 :- 08.30-4.00

*Hard ware பயிற்சி*

- ❖ கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- ❖ Assembling
- ❖ BIOS Configurations (முறைப்படுத்தல்)
- ❖ Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- ❖ Network தொடர்பான அறிமுகம்
- ❖ Troubule Shooting / Maintenance.

*Software பயிற்சி*

- ❖ Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- ❖ Software Install செய்யும் முறை
- ❖ Driver Installation செய்யும் முறை (Sound Card,Modam,VGA,TV Card,Printer)
- ❖ Troubule Shooting (File updating, Copying)

நன்மைகள்

- ❖ பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- ❖ PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- ❖ எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
*No 15, Sirampiyadi lane , Jaffna.*
Telephone :- 021-2228250 , 0777-222422

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

ஏனைய அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வன்னிப் பகுதிகளுக்குச் செல்வதே சிறந்தவழி

## யாழ்.பொது அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.18

அநியாய உயிரிழப்புகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக குடாநாட்டு மக்கள் வன்னிப் பகுதிக்குச் செல்வதே சிறந்த வழியாகும்.

மானிப்பாய் பகுதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

ஸ்ரீலங்காப் படையினராலும் ஈ.பி.டி.பி. துணை இராணுவ ஒட்டுக் குழுவினராலும் 15.01.2006 அன்று நடுநிசியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் உட்பட மூவர் தமதுவீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது அவர்களது வீட்டில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டதுடன், அவரது கணவரும், பிள்ளையும் படுகாயம் அடைந்து யாழ்.மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருமதி அர்த்தநாரீஸ்வரி போஜனும் அவரது இரு பெண்பிள்ளைகளாகிய திருமதி ரேணுகாவும் செல்வி சண்முகாவும் கொல்லப்பட்டுள்ளனர். அவரது கணவராகிய நாகேந்திரம் போஜனும் மகனாகிய போஜன் உல்லாசனும் படுகாயம் அடைந்து ஆபத்தான நிலையில் யாழ்.மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏதோ சமாதானத்தின்பால் கரிசனை கொண்டவர்கள் போல் அரிதாரமிட்டு நாடகமாடும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தமிழின அழிப்பு முன்னெடுப்புக்கு இக்கொடூரச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகளாகும். இச்சந்தர்ப்பத்தில் அநியாயமாக சிங்களப்படையினரால் தமிழ் மக்கள் பலியாக்கப்படுவதில் நின்றும் தம்மைத் தாமே தற்காத்துக் கொள்வதற்கு பாதுகாப்பான வன்னிப் பிரதேசத்திற்கு செல்வதே எமதுபாதுகாப்பிற்கான சிறந்தவழியாகும்.

சட்டத்தினதும் ஒழுங்கினதும் பேரால் தமிழ் மக்களது பாதுகாப்பிற்கு தாமே பொறுப்பு எனக் கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்காப் படையினரது அடாவடித்தனங்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினதும் படையினதும் உயர்பீடத்தினால் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் தமிழ் மக்கள் மீதான போர்த் திணிப்பிற்கான முதற்படிகளாகும். போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுவதில் நின்றும், இராணுவ நோக்கங்களுக்காகவே பின்னடிக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கம் சமாதான வழியிலான அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு தயாராக இல்லையென்பதைக் கடந்த சில மாதங்களாக படையினர் மேற்கொள்ளும் மிலேச்சத்தனமான கொலைவெறி அட்டூழியங்கள் தெளிவாக்குகின்றன. சர்வதேச சமூகம் வெறுமனே பார்வையாளராகவிருந்து, ஸ்ரீலங்காப் படைகளது அட்டூழியங்களையும், சிங்கள- பௌத்த பேரினவாதத்தை நிலைநாட்ட முயலும் ஸ்ரீலங்கா அரசினது வஞ்சகப் போக்குகளையும் கண்டும் மௌனித்திருப்பதானது அவர்களது இன அழிப்பு கொடூரங்களுக்கு துணை போவதாகவே அமைந்துவிடுகின்றது. வெறுமனே கண்டனங்களும், அறிக்கைகளும் எவ் வகையிலும் பயனார் விளைவுகளை ஏற்படுத்தப் போவதில்லை. மெய்யான சமாதானத்தின் மேலுள்ள மக்களது பற்றுதலானது அன்றாடம் சிதைக்கப்பட்டே வருகின்றது. தமிழின அழிப்பிற்கான முன்தயாரிப்புகளில் ஸ்ரீலங்கா அரசு வெளிப்படையாகவே இறங்கியுள்ளது.

இக்கட்டத்தில் தமிழ் மக்கள் தம்மைத் தாமே தற்காத்துக் கொள்வதற்கும் கௌரவத்தையும் சுதந்திரத்தையும் பேணுவதற்கும் மனித உரிமைகளின் பாற்பட்டதும் அடக்குமுறைக்கு எதிரானதுமான போராட்டங்களை முன்னெடுப்பது வரலாற்றுத் தேவையாகிவிட்டது.


கௌரவத்துடனான சுதந்திர வாழ்வியல் உரிமைகளை தமிழ் மக்களாகிய நாம் போராடித்தான் பெறவேண்டும் என்பது தெளிவாகியுள்ளது. மிலேச்சத்தனமாக மேற்கோள்ளப்பட்ட இப்படுகொலைகளுக்கு நாம் எமது வன்மையான கண்டனத்தை தெரிவிப்பதோடு, தமிழ் மக்கள் தமது கௌரவத்தையும், சுதந்திரத்தையும் மீட்பதற்கான அனைத்து வழிமுறைகளையும் கைக்கொள்வதற்கு பின்நிற்கப் போவதில்லை என்பதை சர்வதே சமூகத்திற்கும் ஸ்ரீலங்கா அரசிற்கும் ஓர் எச்சரிக்கையாக வலியுறுத்துகின்றோம்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

**மானிப்பாயில் திங்கட்கிழமை அதிகாலை ஆயுதபாணிகள் புகுந்து தாக்குதல் நடத்திய வீட்டையும் வீட்டு உரிமையாளர் நாகேந்திரம் போஜன் காயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரி வார்ட்டில் உள்ளதையும் கொலையாளிகள் பயன்படுத்திய துப்பாக்கியின் வெற்று ரவை ஒன்றையும் படங்களில் காணலாம்.**

*(படங்கள்:பிரியன், நேசன்).*





## கைதடி மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

தென்மராட்சி,ஜன.18

கைதடி - நாவற்குழி அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்று வகுப்பில் இணைந்த மாணவர்களுக்குப் புத்தகப் பையுடன் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தினர் இவற்றினை தென்மராட்சி வலயக் கல்வி பணிமனை ஊடாக வழங்கியுள்ளனர்.

பாடசாலை நிர்வாகத்தினர் நிதிய நிறுவனத்தினருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டதையடுத்து இப்பொருள்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரேத அறை புனரமைக்கப்படாததால் மக்கள் சிரமம்

தென்மராட்சி,ஜன.18

சாவகச்சேரி மருத்துவமனை பிரேத அறைக் கட்டடத்தினைப் புனரமைத்து, பிரதேச மக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தென்மராட்சி பிரதேச பொதுஅமைப்புகள் சாவகச்சேரி மருத்துவமனை மாவட்ட வைத்திய அதிகாரிக்கு மகஜர் அனுப்பவுள்ளனர்.

யுத்த அனர்த்தங்களின்போது சேதமடைந்த மருத்துவமனை சவக் காப்பகம் இன்னமும் புனரமைக்கப்படவில்லை. இதனால், பிரதேசத்தில் திடீர் மரணங்கள் ஏற்படும் வேளைகளில் சடலங்களைப் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கே கொண்டு செல்லவேண்டியுள்ளது.

இதனால், பொதுமக்களுக்கு செலவுகள் அதிகரிப்பு ஏற்படுவதுடன் நாள்களும் வீணாகின்றன.

சாவகச்சேரி மருத்துவமனையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை செய்யும் வாய்ப்பு உள்ளபோதிலும் பிரேத அறை இன்மையால் அதனைச் செய்ய முடியவில்லை.

சேதமடைந்து காணப்படும் மருத்துவமனை சவக் காப்பகத்தினைப் புனரமைத்து மக்களுக்கு ஏற்படும் கஷ்ரங்களைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## ம.எண்ணெய் அருந்தியவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி,ஜன.18

தவறுதலாக மண்ணெண்ணெய் அருந்திய குடும்பஸ்தர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பெரியமாவடியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ச.சற்குணராஜா (வயது 47) என்பவரே மண்ணெண்ணெய் அருந்தியவராவார்.

இவர் வழமையாகக் கள்ளுப் போத்தல் வைக்கும் இடத்தில் இவரது மனைவி தவறுதலாக மண்ணெண்ணெய் போத்தலை வைத்து விட்டார். இதனால் அதனை தவறுதலாக எடுத்து அருந்திவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது

(ஐ-117)

# தொழில் செய்யத் தடை; பாதுகாப்பற்ற நிலை வன்னிக்கு இடம்பெயரும் கரையோர மக்கள்

**யாழ்**.குடாநாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இராணுவக் கெடுபிடிகளும்



லொறியில் இடம் பெயரும் மக்கள்

இனந்தெரியாதவர்களால் நடத்தப்படும் வன்முறைகளும் மக்களை பாரிய மனத்தாக்கத்துக்கு உள்ளாக்கி பீதியடையச் செய்துள்ளதுடன் வீடுகளுக்குள் முடக்கியும் வைத்துள்ளன.

சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்னர் ஓரளவேனும் சுதந்திரமாக நடமாடிய மக்கள் அண்மைக் காலமாக நடக்கும் அசம்பாவிதங்களால் தமது நடமாட்டத்தைக் குறைத்துக் கொண்டு அது முற்றாக இல்லை என்றே சொல்லலாம் - முடங்கிப் போயுள்ளார்கள்.

வடமராட்சிப் பிரதேசத்தில் தொடரும் வன்முறைச் சம்பவங்கள், கைதுகள், காணாமற் போதல் போன்ற சம்பவங்களால் வடமராட்சியின் பல பிரதேசங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. மக்கள் வீதிகளில் இறங்கி தமது அன்றாடத் தேவைகளுக்காகச் செல்லவே அச்சமடைந்துள்ளனர்.

### வடமராட்சி: ஒரு பார்வை

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து வீடு, தொழில் உபகரணங்கள் போன்றவற்றைப் பறிகொடுத்த கரையோரப் பிரதேச மக்கள் மீண்டும் சொந்த இடத்திற்குத் திரும்பித் தமது வாழ்வியலைப் படிப்படியாகக் கட்டியெழுப்பினர்.

பின்னர், 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இவர்கள் மிகவும் பாதிப்படைந்தனர். அவற்றிலிருந்து மக்கள் தம்மை மீட்டெடுப்பதற்குள் தற்போது தொடர்ச்சியாக இடம்பெற்று



வீதியோரத்துக் ...



வெறிச்சோடிய நலன்புரி முகாம்கள்

வரும் வன்முறைச் சம்பவங்களால் இவர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

அதிகரித்து வரும் இராணுவத்தினரின் கெடுபிடிகளாலும் வன்முறைச் சம்பவங்களாலும் கரையோரப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வன்னிக்குச் செல்வதைத் தற்போது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கடலில் மீன்பிடிப்பதற்குத் தடை, வர்த்தக நிலையங்களில் வியாபாரம் மேற்கொள்வதற்கு அச்சம் போன்றவற்றால் மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

வல்வை[...]பொதுச் சந்தை இராணுவக் கெடுபிடிகளை அடுத்து தெணியம்பைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

வல்வைக் கடலில் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட படகுகள், ட்றோலர்கள் என்பவை கடற்கரையிலிருந்து எடுத்துவரப்பட்டு வெறும் நிலங்களில் வைக்கப்பட்டுள்ளன. சிலர் படகுகளையும் வன்னிக்குக் கொண்டு செல்லும் அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

வடமராட்சியில் இடைத்தங்கல் முகாம்

**வல்லழகனார்**

களில் தங்கியுள்ள மக்களும் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இந்த நிலை தொடருமானால் வெகு



தனியார் காணிகளில் ட்றோலர்கள்

விரைவில் வடமராட்சி சூனியப் பிரதேசமாக மாறி விடுமோ என்று அஞ்சப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழையில் சிறப்புற நடந்த தைப்பொங்கல் தின நிகழ்வுகள்

வலி வடக்கு. ஜன18

இந்து சமய கலாசார அலுவல்கள திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வலிகாமம் பிரதேசத்திற்கான தைப்பொங்கல் விழா கடந்த ஞாயிறன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

அபிவிருத்தி உதவியாளர் ரி. பிரதீ வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் தெல்லிப் பழை பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன் பிரதமவிருந் தினராகக் கலந்துகொண்டார்.

ஆசியுரையினை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பிரதம குரு. க. அகிலேஸ்வரக் குருக்களும் வாழ்த்துரையை இந்து சமய கலாசார திணைக்களத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் க. நாகராசாவும் வழங்கினர்.



வலிகாமம் பிரதேச தைப்பொங்கல் விழாவில் இடம்பெற்ற பட்டி மண்டப நிகழ் வையும் நடனநிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

இதனைத்தொடர்ந்து ஏழாலை களவாவோடை அம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பண்ணிசைக் கச்சேரி, குழுநடனம் தெல்லிப்பழை தோதரகை அம்பாள் அறநெறிப்பாடசாலை மாணவர் களின் பண்ணிசை, நடனம் என்பனவும் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் தற் காலத்தில் தமிழர் பண்பாடு பேணப்படுகின்றது? பேணப் படவில்லை? என்ற தலைப்பிலான பட்டிமன்றமும் இடம்பெற்றன. (எ- 86)

# சமூக சேவைக் கல்லூரியில் டிப்ளோமாக் கற்கைக்கு விண்ணப்பம்

வலி. வடக்கு ஜன.18

இலங்கை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், இலங்கை சமூக சேவைக் கல்லூரியில் சமூகசேவை தொடர்பான டிப்ளோமா கற்கைக்கு தகுதியானவர் களிடம் இருந்து விண்ணப்பம் கோரி யுள்ளது.

தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி களில் இப்பயிற்சிநெறி கொழும்பில் இடம்பெறவுள்ளது. ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பல்கலைக் கழக அனுமதிக்கான அடிப்படைத் தகுதியைப் பெற்றிருக்கவேண்டியது அவசியம்.

இப்பயிற்சிநெறிக்குத் தனிப்பட்டவர் களும் மற்றும் அரச சார்பற்ற செயலகங் களில் கடமையாற்றுபவர்களும் விண்ணப் பிக்க முடியும்.

இரண்டு வருடங்களைக் கொண்ட இப்பயிற்சிநெறி முழுநேரமாக அமை வதினால் அரச உத்தியோகத்தர்கள் தமது லீவுகளை தாமே தமது திணைக்களத் துடன் பெற்றுக்கொள்வதுடன் வேறு கல்வி நிலைகளில் எந்தவொரு பயிற்சி யையும் மேற்கொண்டிருக்கக்கூடாது என் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் இருபது வயதிற்கும் 46 வயதிற்கும் உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். இதற்கான விண்ணப் பங்கள் 12.02.2006 இற்கு முன்னர் பணிப் பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், இல. 191, தர்மபால மாவத்தை, கொழும்பு- 7 என்ற முகவரிக்கு அனுப் பிவைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-86)

# மிதிவெடி அகற்றும் பணி மாதகலில் மீண்டும் ஆரம்பம்

வலி தென்மேற்கு, ஜன.18

மாதகல் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் பொக்கனை, குருதானை ஆகிய இடங்களில் ''ஹலோடிரஸ்ட்'' நிறுவனத் தினால் தற்போது மிதிவெடி அகற்றும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் விடுத் திருந்த வேண்டுகோளை அடுத்து கடந்த 1992 ஆம் ஆண்டு இப்பகுதிகளில் புதைக் கப்பட்ட மிதிவெடிகள் அகற்றும் பணியை ''ஹலோடிரஸ்ட்'' நிறுவனம் ஆரம்பித் திருந்தது. எனினும் கடந்த இருமாதகால மாக இப்பகுதியில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக மிதிவெடி அகற்றும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந் தமை தெரிந்ததே. (எ-135)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் மூன்று நாள் முழுநேர பயிற்சி நெறி

Mobile Phone Repairing Course

Course Condense:-
- Mobile Phone spares (Mobial Phone இல் காணப்படும் பாகங்கள்)
- Type of I.C (Phone ல் காணப்படும் I.C க்கள்)
- Spares பழுதினால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- I.C கள் பழுதடைந்தால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- பொதுவாக Phone ல் ஏற்படும் பழுதுகளும் அதற்கான காரணங்களும்
- பழுதுகளும் சோதனை வரிசைகளும்.
- நேரடியாக சில I.C க்களை மாற்றுவதன் மூலம் பழுதுகளை கண்டறியும் சில வழிமுறைகள்.
- ஒரு phone ல் இருந்து இன்னொரு Phone இற்கு மாற்றக்கூடிய I.C வகைகள்.
- Power amp I.C ல் தான் பிழை உள்ளதென கண்டறிய சில வழிமுறைகள்.
- Software fault, software codes.

Hard Ware பயிற்சி
- Battery இல் voltage அளவிடும் முறை Battery நல்ல நிலையில் உள்ளதா என அறியும் முறை. அத்துடன் Charge ஏறாத Battery ஐ எவ்வாறு மீண்டும் Charge ஏற்றிப்பயன்படுத்துவது பற்றிய பயிற்சி.
- Phone service செய்யும் பயிற்சி.
- Resistors, Transistors, Capacitors போன்ற பொருட்கள் board இல் இருந்து கழட்டி மாற்றுவது பற்றிய பயிற்சி நெறி.
- Charge pin, Battery pin, Sim connector, switch, display போன்றவற்றை கழட்டி மாற்றுவதுபற்றிய பயிற்சி.
- புதிய L.E.D மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி.
- IC களை கழட்டுவது எவ்வாறு மீண்டும் புதிய IC க்களை பொருத்துவது எவ்வாறு என்பது பற்றிய பயிற்சிகள்.
- Phone இல் Charge ஏறாவிடின் Phone இல் எவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்வது பற்றிய பயிற்சிநெறி.
- Hot Gun பயன்படுத்துவது எவ்வாறு என்ற பயிற்சி.

Software பயிற்சிகள்
- Lock உடைப்பது என்பது பற்றிய விரிவான விளக்கம் அத்துடன் பயிற்சி.
- ஒரு Phone இல் உள்ள file ஐ எடுத்து புதிய File மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி (Flash பண்ணும் முறை)

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் பதிவுகளிற்கு முந்துங்கள்

வகுப்புக்கள் ஆரம்பம் 20/01/2006

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்



புதிய பிரிவுகள் ஆரம்பம் : 21.01.2006

Master of Business Administration (MBA)

Available - Accessible - Affordable personalized education

Sikkim Manipal University



The Sikkim Manipal University of Health, Medical and Technological Science was established by an Act of the Sikkim State Legislature in 1995. The University as the approval of University of University of Grants Commission, All India Council for Technical Education, Medical Council of India, Distance Education Council and Nursing Council of India.

Manipal is the nucleus of 53 educational institutions which have an enrollment of 30,000 students. There are 2 Universities, 27 professional colleges. The student body represents 32 countries and the degrees are recognized in over 40 countries.

MBA

Now for the first time you have the opportunity of obtain a prestigious MBA at the only "Authorized" International Study Centre of Sikkim Manipal University in Sri Lanka. The course aims to train graduates in Infrastructure Management Skills required at the higher levels of management. Students will be exposed to the concept of management and the latest Technologies and Strategies required by the relevant industries.

Eligibility: Degree or equivalent profe-ssional qualifica-tion. Work experience will be an added advantages

Duration 2 years (Part time)

FIRST SEMESTER
Management process and organization behavior
Internet Application
Marketing Management
Human Resource Management
Operation Management
Financial Management
Management Information System

SECOND SEMESTER
Strategic Technology Management
Management of Technology transfer, -absorption & IPR
Business Process, Re-Engineering
Enterprise Resource Planning
E-customer Relationship Management & -Supply Chain Management
Conflict Management & Negotiation Skills
History of Management, Case studies

THIRD SEMESTER
Infrastructure Management
Fundamentals of Infrastructure Project Finance
Infrastructure Development & Policy Planning
Project Management
Decision Support System

FOURTH SEMESTER
Electives *
Project
* HRD + MKT / Finance + MKT / System + MKT

IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
T.P. No. : 021 222 8060 / 021 222 2201



இன்னும் நீங்கள் தாமதிக்கிறீர்களா ???



A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேக மானோர் பிரபல பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான வாய்ப்புக்களையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது HND தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 25.01.2006



இ. பிரதீபன்
மானிப்பாய்.

2003ஆம் ஆண்டு கணிதப்பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய நான் கொழும்பு இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் ஆவேன். பல்கலைக்கழக அனுமதிக்கு எனது A/L பெறுபேறுகள் சற்றுப்போதாமல் இருந்தது. இந்நிலையில் கணனித்துறையில் எனக்கிருந்த ஆர்வம் கணனித்துறையில் ஓர் பட்டப்படிப்பினை மேற்கொள்ளவேண்டும் என்ற பேரவாவாக மாறியது. எனது ஆர்வத்திற்கு பெற்றோரும் பக்கபலமாக இருந்தனர். கொழும்பில் வசித்துவந்த நான் யாழ்ப்பாணத்தில் IIS நிறுவனம் சர்வதேச ரீதியில் பிரபல்யமான BTEC HND கற்கைநெறியினை நடாத்திவருவதாகக் கேள்வியுற்றேன். கொழும்புடன் ஒப்பிடும்பொழுது குறைந்த செலவில் இக்கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் கற்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதை அறிந்த எனது பெற்றோர் HND ஐத் தொடர அனுமதியளித்தனர். HND 4வது பிரிவில் பயின்றுவரும் நான் இறுதியாண்டுப் பட்டப் படிப்பினை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குரிய ஏற்பாட்டினையும் IIS நிறுவனமே எனக்கு செய்துதரவுள்ளது. என்போன்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத்தவறிய மாணவர்களுக்கு HND மிகச்சிறந்த ஒன்றாகும்.

BTEC HND
World Class Qualifications
Delivered Locally...... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டக்கச்சிப் பிரதேசத்தில் விழிப்புக் குழுக்கள் அமையும்

பரந்தன்,ஜன.18

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் விரைவில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வட்டக்கச்சிப் பிரதேச காவல் பணிமனை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக இளைஞர்களிடையே சந்திப்புகள் நடத்தப் பட்டுவருகின்றன.

கடந்த 10ஆம் திகதி வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துடன் கருத்த ரங்கு நடத்தப்பட்டது.

விழிப்புக் குழுக்களை அமைப்பதன் மூலம் பிரதேசத்தில் இடம்பெறும் திருட்டு மற்றும் சமூக விரோதச் செயல்களைத் தடுத்து பிரதேச அபிவிருத்தியை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-352-204)

# இளைஞர், யுவதிகளுக்கு குறுகிய காலப் பயிற்சிகள்

பரந்தன்,ஜன.18

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விசுவமடு பிரதேசத்தில் இளைஞர், யுவதிகளுக்கான மேசன், தச்சுவேலை தொடர்பான குறுங்கால பயிற்சித் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

அண்மையில் சமுதாய முன்னேற்ற நிலையத்தின் இணைப்பாளர் மு.பாலசுந்தரம் தலைமையில் இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. இதில் பொதுச்சுடரினை பெண்கள் வேலைத்திட்ட நிர்வாக அலுவலர் க.நிமாலினி ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பாக பெண்கள் வேலைத் திட்டப் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி அம்மணி ஏற்றிவைத்தார்.

கருத்துரைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழக உத்தியோகத்தர் எஸ்.சிவஞானசுந்தரம், சமுதாய முன்னேற்ற நிலைய தொழிற் பயிற்சி உத்தியோகத்தர் உட்பட பலரும் நிகழ்த்தினர்.

இப்பயிற்சி நெறிக்கு விசுமடுப் பகுதியைச் சேர்ந்த தலா 20 இளைஞர் யுவதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(எ-6-352)

# அளம்பில் வீதியின் நிலை மோசம்!

புதுக்குடியிருப்பு,ஜன.18

தண்ணீரூற்றிலிருந்து அளம்பில் செல்லும் வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால், இவ்வீதியால் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

15 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி, முள்ளியவளை, அளம்பில், செம்மலை, நாயாறு, கறுக்கேணி, குமுழமுனை, ஆறுமுகந்தான்குளம், பூதன்வயல், உடுப்புக்குளம் ஆகிய கிராமங்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத இவ்வீதியில் கடந்த வருட இறுதியில் பெய்த பெருமழை காரணமாக குண்டும் குழியும் ஏற்பட்டுள்ளன.

இதனால், இவ்வீதியில் பயணம் செய்வோர் விபத்துக்களைச் சந்திக்க வேண்டியுள்ளதுடன், அவசர நோயாளர்களை வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

வீதிப் போக்குவரத்தை சிரமமின்றி மேற்கொள்ள உரியவர்கள் விரைவில் வீதியைப் புனரமைத்துத் தரவேண்டும் என மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-353-204)

## அபிவிருத்திக்குக் கிராமம் தெரிவு

பரந்தன்,ஜன.17

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் வடக்கு கரையோரப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கிளிநொச்சி உமையாள்புரம் கிராமம் அபி விருத்தி செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் உமையாள்புரம் கலையரசி முன்பள்ளியில் நடைபெற்றது.

இதில் சமூக, கிராம அபிவிருத்திகளை முன்னெடுப்பது தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்தரையாடப்பட்டன.

பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர், உமையாள்புரம் கிராம அலுவலர், கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-352-204)

## காலபோகச் செய்கைக்கு 160 பேருக்குக் கடன்

மல்லாவி,ஜன.18

முல்லைத்தீவு மாவட்டததிலுள்ள சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு வழங்கிவரும் தொடர் கடன்களின் ஓர்அங்கமாகக் காலபோக நெற் செய்கைக்கான கடனுதவிகளை வழங்கிவருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் 160 பயனாளிகளுக்கு அண்மையில் நான்கு மில்லியன் ரூபா நிதி கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடனுதவி மூலம் சுமார் 500 ஏக்கரில் நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

(எ-322)

# ஒட்டறுத்த குளம் - வவுனிக்குளம் வீதி பலத்த சேதம்; பயணிகள் பெரும் சிரமம்!

மல்லாவி,ஜன.18

ஒட்டறுத்தகுளம் - வவுனிக்குளம் பிரதான வீதி, நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் பலத்த சேதமடைந்துள்ளது.

இதனால், இந்த வீதியூடாகப் பயணம் செய்யும் பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.



பலத்த சேதமடைந்துள்ள வீதியில் சிரமத்தின் மத்தியில் பயணம். *(படம்: மல்லாவிச் செய்தியாளர்).*

அண்மையில் பெய்த கடும் மழையின் போது இவ் வீதி வாகனம் எதுவும் செல்ல முடியாத நிலையில் காணப்பட்டது. இதனையடுத்து பாலிநகர், பாண்டியன்குளம், நெட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளுக்கான பஸ்சேவைகள் சில நாள்கள் தடைப்பட்டமை தெரிந்ததே.

இதனால், இந்தப் பிரதேச விவசாயிகள் தமது விளைபொருள்களை சந்தைப்படுத்த முடியாது சிரமங்களை எதிர்கொண்டுவருவதாகக் கூறப்பட்டது.

(எ-322)

# நீர்த்தாங்கிகள் நிறுவும் பணிகள் தாமதம் மல்லாவி மக்கள் விசனம் தெரிவிப்பு

பரந்தன், ஜன.18

மல்லாவியில் நீர்ப் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட நீர்தாங்கி அமைக்கும் பணி இன்னும் பூர்த்தியாகவில்லை. இதனால் மக்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறுவது தாமதமடைகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மல்லாவியில் குடிதண்ணீர் பெறுவதில் ஏற்படும் சிக்கல்களை நீக்கும் முகமாக 'நீர்ப்' திட்டத்தின் கீழ் கடந்த வருடம் தண்ணீர்த் தாங்கி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு வருடம் கடந்தும் இதுவரை கட்டடப்பணிகள் பூர்த்தியாக்கப்படவில்லை.

நீர்த்தாங்கி அமைக்கும் பணியை விரைவில் பூர்த்தி செய்து தருமாறு பிரதேச மக்கள் பலதடவைகள் உரியவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர் என்றும்-

எனினும் இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை என்றும் கூறப்பட்டது. இதனால் மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

(எ-352-204)

# மாவீரர் நினைவாக நிதியம்

ஒட்டுசுட்டான், ஜன.18

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மாவீரரான 2ஆம் லெப்ரினன் சுதர்சன் ஞாபகார்த்தமாக முல்லைத்தீவில் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியம் ஆரம்பிக்கும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மாவீரரின் சகோதரர்கள், ஆரம்ப நிதியை பாடசாலை அதிபரிடம் கையளித்தனர்.

இந்நிதியில் 10 ஆயிரம் ரூபா ஜி.ச[illegible]ாதாரணப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த அன்ரனிஸ் நிரோஜினியின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(எ-314-204)

# தமிழீழ ஆவணக் காப்பகத்தில் மாணவர் கல்விச் சேவை ஆரம்பம்

ஜீ.சி.ஈ சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களின் நன்மை கருதி தமிழீழ ஆவணக் காப்பகத்தில் மாணவர் கல்விச்சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி டிப்போ வீதியில் (பழைய புகையிரத வீதி, மத்திய சந்தைக்கு அண்மையில்) உள்ள ஆவணக் காப்பகத்தில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




பிரதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த ஆவணக் காப்பகம் மாணவர்களின் நன்மை கருதி திறந்திருக்கும்.

அறிவார்ந்த, துடிப்பும், தேடலுமிக்க எதிர்கால தமிழுலகை - வழிகாட்டும் ஒரு இளைய தலைமுறையை உருவாக்கும் நோக்குடனேயே இந்தக் காப்பக மாணவர் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தமிழீழ ஆவணக்காப்பக பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணக்காப்பத்தில் தமிழ்ப் பத்திரிகைகள் மாணவரின் கல்வி வளர்ச்சிக்காக வெளியிடும் சிறப்புச் சஞ்சிகைகளோடு அரச வர்த்தமானி மற்றும் சகல நாளேடுகளும், கல்விசார் ஆங்கில நாள் மற் றும் வாராந்த சஞ்சிகைகளும் வைக்கப்பட் டுள்ளது.

இவை தவிர இலங்கை, தமிழக எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட, சிறுவர்களுக் கான பல்வேறு வெளியீடுகளும் உள்ளன. அத்துடன் ஆவணங்களை நீண்ட காலம் அழி யாமல் வைத்திருக்கும்மைக்ரோபிலிம்வசதி களும் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-6)

## முன்பள்ளி மாணவர் களப் பயணம்

விசுவமடுப் பிரதேச முன்பள்ளி மாணவர்கள் கடந்த 7ஆம் திகதி களப் பயணம் (சுற்றுலா) ஒன்றினை மேற்கொண்டனர்.

விசுவமடுப் பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் செல்வி இ.ம.ஜெயசீலியின் நெறிப்படுத்தலில் இந்தக் களப் பயணம் இடம்பெற்றது.

கிளிநொச்சி ஆங்கில முன்பள்ளி, நவம் அறிவுக் கூடம், தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகம், கிளிநொச்சி நகர் ஆகிய இடங்களை இந்த மாணவர்கள் சென்று பார்வையிட்டனர்.

(எ-6-353)

## விளையாட்டு வீரர்களுக்கு உதைபந்தாட்டச் சீருடைகள்

ஒட்டுசுட்டான்,ஜன.18

துணுக்காய் பிரதேசத்திற்கு உட்பட்ட 10 பாடசாலைகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அண்மையில் உதைபந்தாட்டச் சீருடைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியினை இளையோர் செயற்பாட்டு நிறுவன நிதி இணைப்பாளர் கமல் ஏற்றி வைத்தார். துணுக்காய் கல்வி வலயக் கொடியினை கல்விப் பணிப்பாளர் குரூஸ் ஏற்றி வைத்தார்.

வீரர்களுக்கான சீருடைகளை செயற்பாட்டு நிறுவன நிதி இணைப்பாளர் கமல், மாங்குளம் வித்தியாலய அதிபர் ஆகியோர் வழங்கினர்.

வசதி குறைந்த பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்த சீருடைகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-6-341)


## தாமரைக் குளத்தில் 75 வீடுகள் நிர்மாணம்

ஒட்டுசுட்டான்,ஜன.18

மன்னார் தாமரைக் குளம் பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 75 வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இப்பகுதியில் ஆசிய வங்கியின் நிதியுதவியுடன் தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இந்த 75 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-6-341)



வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் மாவீரர் லெப்.திருவருள் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட புதிய நுழைவாயில் அண்மையில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் அருட்தந்தை எஸ்.வசந்தசீலன் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் து.இளங்குமரன், மாவீரர் லெப். திருவருளின் தாயார் திருமதி தம்பையா தில்லைநாயகி, வலைப்பாடு அ.த.க.பாடசாலை அதிபர் செல்வரத்தினம் மற்றும் வைத்திய அதிகாரி, பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் நிற்பதையும் முதலா[illegible]து படத்திலும் -

நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள் ம[illegible] அடுத்துள்ள படத்தில் காணலாம். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

## உரும்பிராய் கூழாவடி காட்டுபைரவர் ஆலய
## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

மேற்படி ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் 20.01.2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.15 முதல் 10.45 வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் எம் பெருமானுக்கு திருக்குடத்திருமஞ்சனபெருவிழா இடம்பெற திருவருள்பாலித்துள்ளார்.

ஆரம்பக் கிரியைகள் 18.01.2006 காலை 6மணி முதல் இடம்பெறும். 19.01.2006 வியாழக்கிழமை முற்பகல் 10 மணி முதல் 3 மணிவரை **எண்ணைக் காப்புச் சாத்துதல்** இடம்பெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு - 'வேதாகம ஜோதி கலாநிதி' **பிரம்மஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்**
(புன்னாலைக்கட்டுவன் ஈவினைப் பிள்ளையார் தேவஸ்தானம்)

அடியார்கள் அனைவரையும் திருக்குடத்திரு மஞ்சன பெருவிழாவிற்கு வருகை தந்து பைரவரின் திருவருளைப் பெற்று ஏகுமாறு வேண்டுகிறோம்.

உரும்பிராய். (45398)(32-26-16-19) **ஆலய அறங்காவலர்கள்.**

அளவெட்டி - மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## சங்க அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

எமது சங்கக் கிளைக்குழு தேர்தலுக்காக 31-01-2005 இல் மூடப்பட்ட அங்கத்தவர் பெயர் விவரமடங்கிய வாக்காளர் பட்டியல்கள் 18-12-2006 தொடக்கம் 03-02-2006 வரை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பின்வரும் எமது விற்பனை நிலையங்களிலும், தலைமைக் காரியால யத்திலும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

| கிளை இல | காட்சிப்படுத்தும் விற்பனை நிலையங்கள் | | |
|---|---|---|---|
| 1 | கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி | கிளை | 01 |
| 2 | தபாற்கந்தோரடி, அளவெட்டி | கிளை | 02 |
| 3 | ஆலடி, அளவெட்டி தெற்கு | கிளை | 03 |
| 4 | முதலியார் கோயிலடி, அளவெட்டி | கிளை | 04 |
| 5 | 4ஆவது கிளை முதலியார்கோயிலடி | | |
| 6 | கணேஸ்வரம், அளவெட்டி | கிளை | 06 |
| 7 | அளவெட்டி தெற்கு, அளவெட்டி | கிளை | 07 |
| 8 | மல்லாகம் சந்தி | கிளை | 08 |
| 9 | கல்லாரை, மல்லாகம் | கிளை | 09 |
| 10 | குளமங்கால், மல்லாகம் | கிளை | 10 |
| 11 | கலைநகர் அளவெட்டி தெற்கு | கிளை | 11 |
| 12 | நீதிமன்றவீதி, மல்லாகம் | கிளை | 12 |
| 9ஏ | கே.கே.எஸ். றோட் மல்லாகம் | கிளை | 9ஏ |
| கிவி/அள.மல்.ப.நோ.கூ.சங்க அங்கத்தவர்கள் | கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி | கிளை | 01 |

ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 03-02-2006 இற்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் விண்ணப் பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வி.விஜயகுலசிங்கம், தலைவர். (சி/47381)(26-16-19) செ.இராஜேந்திரன் செயலாளர்.

## சண்டிலிப்பாயில் அலுமினியம் பொருத்தும் பயிற்சி நெறி

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை யினால் சண்டிலிப்பாயில் நடத்தப்படவிருக் கும் அலுமினிய பொருத்துதல் தொடர்பான பயிற்சி நெறிக்கு 25இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தெரிவாகியும் பயிற்சிநெறி இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இதற்கான போதனாசிரியர் இல்லாமையே இதற்கு காரணமென்று தெரிவிக்கப்படுகின் றது. போதனாசிரியர் பதவிக்கு அரச சான்றி தழுடன் அனுபவமுடையவர்கள் விண்ணப் பிக்கலாம். என்று தெரிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப் பங்களை 'இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, கிராமிய தொழிற்பயிற்சி நிலையம் பிரதேச செயலகம் முன்பாக, சண்டிலிப் பாய்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு அதன் பொறுப்பதிகாரி வே. ஸ்ரீகுகன் கேட்டுள்ளார் (ஐ-100)

## கைதடி ஆலயங்களில் திருவாசக முற்றோதல்

கைதடி சைவ ஐக்கிய சங்க பஜனைக் குழு வினர் திருவெம்பாவை உற்சவத்தின் போது கைதடி பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் திருவாசக முற்றோதலை நிகழ்த்தியுள்ளனர்.

திருவெம்பாவை ஆரம்ப தினம் தொடக் கம் நிறைவு நாள் வரை தினமும் ஒவ்வொரு ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நடத்தப் பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது.

கைதடி தாக்கடித்தான்புலம் வைரவர் ஆலயம், கைதடி வீரகத்தி விநாயகர் ஆலயம், கைதடி கயிற்ற சிட்டி கந்தசாமி ஆலயம், கைதடி இணுங்கித் தோட்டம் முருகன் ஆலயம், கைதடி குருநாரி ஆலயம், கைதடி அம்மன் ஆலயம், கைதடி சச்சிதானந்த ஆச்சிரமம் ஆகிய இடங் களில் முற்றோதல் நடத்தப்பட்டது.(ஐ-117)

### கொங்கிறீற் கற்கள் விற்பனை

தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிட்டு விற்பனை செய்யப்படுகிறது. 1 அடி நீளம், 4'' அகலக் கல்லின் விலை ரூபா 26- மட்டும். நேரடியாகப் பார்வையிட்டுப் பெற்றுச் செல்லவும்.

இடம்:- VNC
- கும்பளாவளைப் பிள்ளையார் கோயில் அருகில்
அளவெட்டி மந்தி, அளவெட்டி

(45425) (26-16-19)

## சேவை நலன் பாராட்டு




இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் 5வருடகாலமாகவும் திருகோணமலை சீனக்குடா புகையிரத நிலையத்தில் 15 வருடகாலமாகவும் மற்றும் ஏனைய பிறமாவட்டங்களில் 15 வருட காலமாகவும் தொடர்ந்து சேவையாற்றி இன்று (18-01-2006) தனது 60ஆவது அகவையில் சேவையில் இருந்து ஓய்வு பெறும் **திரு.இராசு தேவராசா** அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு கற்பக விநாயகர் அருள் வேண்டி வாழ்வில் பல்லாண்டு காலம் வளமாக வாழ வாழ்த்துகின்றோம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
இருபாலை,
கோப்பாய்.

வாழ்த்துவோர்:-
அம்மா, மனைவி விமலேஸ்வரி(ராணி), தங்கை சந்திராதேவி சுப்பிரமணியம் குடும்பம், நாகராசா குடும்பம், தர்மலிங்கம் குடும்பம் (கமலா), ஸ்ரீரங்கநாதன் குடும்பம் (பேபி), சுரேஸ் குடும்பம், உறவினர்கள், நண்பர்கள்.

(45435)(26-16-19)


## இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், யாழ்.கிளை.

### 2006 ஆம் ஆண்டுக்கான உறுப்புரிமை

இ.செ.ச.உறுப்பினர்கள் தங்கள் 2006ஆம் ஆண்டு உறுப்புரிமை யினை புதுப்பிக்கவோ அல்லது, புதிய உறுப்பினராக சேரு வதற்கோ, புதிய உறுப்பினர் படிவத்தைப் பூர்த்தி செய்து 2006-01-30 ஆம் திகதிக்கு முன்னராக தமது பிரிவுத் தலைவரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (புதிய உறுப்பினர் படிவம் பிரிவுத்தலைவர்களிடம் இருக்கின்றது) 2006-02-01 ஆம் திகதிக்கு முன்னதாக பிரிவுத்தலைவர்கள் அவற்றை கிளைக்குச் சமர்ப்பித்தல்வேண்டும். தங்கள் உறுப்புரிமையை புதுப்பிக்காவிடின் 2006-02-20ஆம் திகதி நடைபெறவுள்ள அலகு ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்ற முடியாதென்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றோம்.

(சி/47382)(26-16-19) கௌரவ செயலாளர்.

# ஓராண்டு நினைவு



அன்னை மடியில் 30-01-1931

ஆண்டவன் அடியில் 18-01-2005

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் வைப்பவன்
இறப்பினும் வாழ்வான்"

காலம் ஒன்று உருண்டோடிவிட்டது பப்பா!
கண்ணிமைகும் வேளையும்
- எம்மைவிட்டு நீங்கள் பிரியவில்லை
பொன்னான பாசப்பிணைப்பும், பண்புகளும்
வைரமான உங்கள் மன உறுதியும்
மனக்கண்களை விட்டு நீங்கவில்லை பப்பா!
உடலால் நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உள்ளத்தால் உணர்வால் உங்களோடு வாழ்கின்றோம்
கருணையின் இறைவன் கரம்தன்னில் நீங்கள் என்றும்
கனிவாக இளைப்பாற இறையாசி வேண்டுகின்றோம்
இடையறாது செபிக்கின்றோம்.
''நித்திய சாந்தியில் அமைதி பெறுங்கள்''

# அந்தோனிப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை

[ஆசிரியர்] பாஷையூர்

46, சென்.செபஸ்தியன் வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 0312235890

- குடும்பத்தினர்.

(45433)(24-19-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய நீதிபதி முன்பாக சதாம் ஹூசைன் மீதான விசாரணை?

பக்தாத்,ஜன.18

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹூசைன் தொடர்பான வழக்கு விசாரணைகள் அடுத்த வாரம் (24ஆம் திகதி) புதிய நீதிபதி ஒருவர் தலைமையில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

இதுவரை பிரதம நீதிபதியாகக் கடமையாற்றிய ரிஸார் அமீன் கடந்த வாரம் தனது ராஜினாமாவைச் சமர்ப்பித்திருந்தார். அவரிற்குப் பதிலாக, இந்த வழக்கில் கடமையாற்றி வரும் 5 பேர் அடங்கிய நீதிபதிகள் குழுவில் இருக்கும் மூத்த நீதிபதியான சஹீட் ஹமீட் என்பரே பிரதம நீதிபதியாகக் கடமையேற்பார் என அதிகாரிகள் கோடிகாட்டியுள்ளனர். எனினும், இந்தப் பதவிமாற்றம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

# 76 வயதுக் கைதிக்கு மரண தண்டனை

## அமெரிக்காவில் நிறைவேற்றம்!



நியூயோர்க், ஜன.18

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த மிக வயதான மரணதண்டனைக் கைதிக்கு நேற்று தண்டனை நிறைவேற்றப்பட்டது.

76 வயதான கல்ரின்ஸ் ரே அலன் என்ற நபருக்கே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. கண்தெரியாதவரான இவர், சான் பிரான்ஸிஸ்கோ அருகே உள்ள சான் குயின்டன் சிறையில் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

நடக்க முடியாமையால் சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் அலன், மரண தண்டனை நிறைவேற்றப்படும் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதும் மரணப் படுக்கைக்கு மாற்றப்பட்டார். அதில் வைத்து அவருக்கு விஷ ஊசி போடப்பட்டது.

தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அவரது வயது மற்றும் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு கருணை காட்டும்படி அவரது வழக்கறிஞர்கள் கோரினர் எனினும் அந்த மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டு மூன்று பேரைக் கொலை செய்ததற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மற்றொரு கொலை வழக்கில் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவ்வளவு காலமும் அவர் அந்தத் தண்டனையை அனுபவித்து வந்தார்.

இறப்பதற்கு ஒரு நாள் முன்னதாகவே அலன் தனது 76ஆவது பிறந்த நாளைச் சிறையில் கொண்டாடினார். 1976ஆம் ஆண்டு அமெரிக்க உயர் நீதிமன்றம் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான அனுமதியை வழங்கியதன் பின்னர் தண்டனை நிறைவேற்றப்பட்ட மிக வயதான இரண்டாவது கைதி இவராவார்.

தனது மகனின் 17 வயதான காதலியைக் கொலை செய்தமைக்காகவே அலனுக்கு முதலில் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. அவர் களவு முயற்சி பற்றிப் பொலீஸாரிடம் அப் பெண் சொல்லிவிடலாம் என்று பயந்ததால் அவர் அவளைக் கொலை செய்தார்.

1980இல் சிறையில் இருந்தபடி மற்றொரு சாட்சியைக் கொல்லுமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார். அப்பணிக்கு அமர்த்தப்பட்ட நபர் குறித்தவரைக் கொன்ற சமயம் அங்கே நின்றிருந்த மற்றும் இருவரும் பலியாகினர். ஒரு பலசரக்குக் கடையில்இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அந்தக் கொலைகளுக்காகவே அலனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அவரது 23 வருட சிறைவாசமும் மேன்முறையீடுகளிலேயே சென்றது. (ம)

## போர்பஸ் பீரங்கி பேர ஊழல் வழக்கு

# சோனியாவின் உறவினர் குறித்து சர்ச்சை



புதுடில்லி, ஜன.18

போர்பஸ் பீரங்கி பேர ஊழல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவரான இத்தாலிய வர்த்தகரும் இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியின் உறவினருமான ஒட்டாவியோ குவாத்ரோட்சிக்கு சாதகமாக இந்திய அரசு செயற்படுவதாக சர்ச்சை எழுந்துள்ளது.

ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமராக இருந்தபோது இந்திய இராணுவத்துக்கு சுவிற்சர்லாந்தின் போபர்ஸ் நிறுவனத்திடமிருந்து பீரங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன்போது ராஜீவ், குவாட் ரோட்சி, பிரிட்டனில் வசிக்கும் இந்திய தொழிலதிபர்களான இந்துஜா சகோதரர்கள் ஆகியோர் தரகுப்பணம் பெற்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இது குறித்து விசாரணை நடத்திய மத்திய புலனாய்வுத்துறை ராஜீவ், குவாட்ரோட்சி, இந்துஜா சகோதரர்கள் உட்பட 13 பேர் மீது ஊழல் வழக்குப் பதிவு செய்தது. இவர்களில் குவாட் ரோட்சி பெற்ற இந்தியப் பணம் 21 கோடிரூபா பிரிட்டிஷ் வங்கி ஒன்றில் உள்ள அவரது இருவங்கிக் கணக்குகளில் இடப்பட்டுள்ளதாக புலனாய்வுத்துறை கூறியது. குறிப்பிட்ட அந்த வங்கிக் கணக்குகளை முடக்குமாறு புலனாய்வுத்துறை கேட்டதற்கிணங்க பிரிட்டிஷ் அரசு அவற்றை முடக்கியது.


இந்நிலையில் குவாட்ரோட்சியின் வங்கிக் கணக்குகளை முடக்கத் தேவையில்லை என்று பிரிட்டிஷ் அரசிடம் இந்திய சட்ட அமைச்சகம் அறிவித்தது.இதனால் வங்கிக் கணக்கு முடக்கத்தை பிரிட்டிஷ் உயர் நீதிமன்றம் விலக்கி கடந்த 11 ஆம் திகதி உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து அந்த வங்கிக் கணக்குகளில் இருந்த சுமார் 21 கோடி இந்திய ரூபாவை குவாட்ரோட்சி ஒரே நாளில் மீளப் பெற்று விட்டார்.

இந்நிலையில் சட்டத்தரணி அஜர் அகர்வால் எனபவர் தாக்கல் செய்த ஆட்சேபனை மனுமீதான தீர்ப்பில் பிரிட்டிஷ் வங்கிக் கணக்குகளிலிருந்து குவாட் ரோட்சி பணம் எடுப்பதை தடுக்குமாறு இந்திய உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்தது. ஆனால், இதற்கு இருநாள்கள் முன்னதாகவே பணத்தை குவாட்ரோட்சி எடுத்து விட்டதால் இந்த உத்தரவால் பயனற்றுப் போய்விட்டது.

இந்தச் சூழ்நிலையிலேயே சோனியாவின் உறவினர் என்பதால் குவாட்ரோட்சிக்கு ஆதரவாக இந்திய சட்ட அமைச்சு செயற்பட்டுள்ளதாகச் சர்ச்சை எழுந்துள்ளது. (ஒ)

உலக அரங்கில்

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் ஒருவர் பலி; 250 பேர் படுகாயம்



மதுரை,ஜன.18

தமிழகத்தின் மதுரை மாவட்டம் அலங்கா நல்லூரில் தைப்பொங்கலையொட்டி நடத்தப்படும் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் மாடுகள் முட்டி ஒருவர் உயிரிழந்தார். சுமார் 250 பேர் காயமடைந்தனர்.

பொங்கல் திருநாளையொட்டி அலங்காநல்லூரில் ஆண்டுதோறும் நடைபெறும் ஜல்லிக்கட்டு உலகப் புகழ்பெற்றது. அலங்காநல்லூரில் முனியாண்டி சுவாமி முத்தாலம்மன் கோயில் உற்சவ தினத்தில் கோட்டை முனியாண்டி சுவாமி திடலில் நேற்றுமுன்தினம் காலை 10.40 மணிக்கு ஜல்லிக்கட்டு தொடங்கியது. முதலாவதாக கோயில் காளை அவிழ்த்து விடப்பட்டது. இக்காளையை சம்பிரதாயத்துக்கிணங்கி எவரும் பிடிக்கவில்லை.

இதன்பின்னர், வெளியூர் மாடுகள் அவிழ்த்துவிடப்பட்டன. பல்வேறு பகுதிகளிலிருந்து 500 இற்கும் மேற்பட்ட காளைகள் அலங்காநல்லூர் கிராமத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. அவை வரிசையாக வாடி வாசலிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக அவிழ்த்துவிடப்பட்டன.

கூரிய கொம்புகள், கொழுத்த திமில்கள், மிரட்டும் பார்வையுடன் சீறிப்பாய்ந்த காளைகளை அடக்கமுயன்றனர் மாடுபிடி வீரர்கள்.

காளைகளை அடக்கிய 'காளையர்களுக்கு' தங்கம் மற்றும் வெள்ளிக் காசுகள், தொலைக்காட்சிப் பெட்டி, சுவர் கடிகாரங்கள், சைக்கிள்கள், சில்வர் பத்திரங்கள், பண முடிப்புகள் உள்ளிட்ட பரிசுப் பொருள்கள் உடனுக்குடன் கிராமக் குழு சார்பில் வழங்கப்பட்டன. மாடுபிடி வீரர்களால் சில காளைகளை அடக்கமுடியவில்லை. இதையடுத்து அவற்றின் உரிமையாளர்களுக்குப் பரிசில்கள் அளிக்கப்பட்டன. இதில் மாடுகள் முட்டித் தூக்கி வீசியதில் ஒருவர் உயிரிழந்தார்.

மேலும் 250 பேர் வரை படுகாயமடைந்தனர். அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. (ஒ)

## தமிழக சட்டமன்ற உறுப்பினர் இருவர்

# பா.ம.கவிலிருந்து அ.தி.மு.கவிற்கு தாவல்

தமிழகத்தில் டாக்டர் ரமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியில் இருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் இருவர் ஜெயலலிதாவின் அ.தி.மு. கவிற்குத் தாவினர். கடந்த வாரம் அந்தியூர் உறுப்பினர் எஸ்.ஆர். கிருஷ்ணன் பா.ம.கவில் இருந்து விலகினார். சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமா செய்தார். இப்போது மேலும் இருவர் விலகியுள்ளனர். அவர்கள் இருவரும் அ.தி.மு.கவில் இணைந்தனர். இதையடுத்து, சட்டப் பேரவையில் பா.ம.கவின் பலம்16 ஆகக் குறைந்துள்ளது. மேலும், சட்டப்பேரவையில் 3 உறுப்பினர் பதவிகள் காலியாகியுள்ளன.

வந்தவாசி தனித் தொகுதியில் வெற்றி பெற்ற முருகவேல்ராஜன், தாராபுரம் தனி தொகுதியில் வெற்றி பெற்ற சிவசாமி வின்செட் ஆகியோர் தங்களது ராஜினாமாக் கடிதங்களை சட்டப் பேரவைத் தலைவர் கா. காளிமுத்துவிடம் நேற்று முன்தினம் சமர்ப்பித்தனர்.

இருவருமே கடந்த சில ஆண்டுகளாக பா.ம.கவில் தனித்து செயற்பட்டு வந்தனர். சட்டப் பேரவையில் பா.ம.க வெளிநடப்பு செய்யும் போது இவர்கள் அதில் கலந்து கொள்ளாமல் அவை நடவடிக்கைகளில் பங்கேற்றனர்.

கட்சிக் கட்டளைக்கு கட்டுப்படவில்லை என்று கூறி, இவர்களது பதவிகளை பறிக்குமாறு கோரி 3 ஆண்டுகளுக்கு முன்பு பா.ம.க தலைவர் ஜி.கே. மணி, சட்டப் பேரவை தலைவர் காளிமுத்துவிடம் மனு கொடுத்தார்.

அதன் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை விடுத்தார்.

அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதற்கிடையில், இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் பா.ம.க வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கின்றது.

இந்நிலையில், இருவரும் திங்கட்கிழமை தங்களுடைய பதவியை ராஜினாமா செய்து அ.தி.மு.க. விற்கு தாவினர். (ஒ)

# பின்லேடன் உயிரோடிருக்கிறார் அமெரிக்கா திடமாக நம்புகிறது

சமீபத்தில் குறிவைக்கப்பட்ட தாக்குதலில் இருந்து பின்லேடனும் அவருக்கு அடுத்த நிலைத் தலைவரான அல்மான் - அல்சபாரியும் இன்னும் உயிருடனேயே உள்ளனர் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அல்கெய்டா தலைவரும் அவரது சகாவான அல்- ஷவாரியும் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லைப் பிராந்தியத்திலேயே இன்னும் உயிருடன் இருக்கின்றனர் எனத் தாம் நம்புகிறார் என பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கென்றி குறும்புடன் தெரிவித்தார்.

பதுங்கியிருக்கும் அல்கெய்டாவினர் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடுகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அல்கெய்டாவினரைத் தாக்குவதாக எண்ணி கடந்த வெள்ளிஅன்று பாகிஸ்தான் கிராமம் ஒன்றின் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 18 கிராமவாசிகள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தாக்குதலில் அல்-சவாரி கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், அமெரிக்கா அதனை மறுத்துள்ளது.

[illegible] அமைப்பான [illegible]யே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்க ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு எதிராக ஆயிரக்கணக்கான பாகிஸ்தானியர்கள் கடந்த சனியன்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

''அல்கெய்டா தலைமைத்துவம் தொடர்பாக நாம் சில உறுதியான தகவல்களைப் பெற்றிருக்கின்றோம். அதன்படி பின்லேடன் அந்தப்பகுதிகளிலேயே உள்ளார் என நாம் நம்புகின்றோம்'' என்றார் அவர்.

அதேசமயம் பின்லேடன் உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்து விட்டாரா என்ற எந்தத் தகவலும் இல்லை. அவர் அமைதியாகி விட்டார். இது எமது செயற்பட்டுக்குக் கிடைத்த வெற்றி என மேலும் தெரிவித்தார். ஆனாலும் அவர்கள் பதுங்கி இருந்து மீண்டும் ஒரு செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு திட்டமிடுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆவது நாள் நினைவுதினம்

பிறப்பு 26 - 11 - 1927

இறப்பு 06 - 12 - 2005



### திருமதி வயிரவிப்பிள்ளை சின்னம்மா

*அருகிருந்தெமக்கு அரும்பணிகள் பல செய்து*
*உயர்வு பெறவைத்த எம் உத்தம தெய்வமே!*
*நாற்பத்தைந்து நாள்கள் நம்மைவிட்டு சென்றும்*
*நாங்கள் உம்மை மறக்காமல் நாளும் வாடுகின்றோம்.*

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் நாளை (19.01.2006) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நண்பகல்12 மணிக்கு நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உசன்,
மிருசுவில். (45446) (32-15-34)

**பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## தேவை

படப்பிடிப்பாளர் ஒருவருக்கு நல்ல நிலையில் உள்ள

VIDEO, DIGITAL, STILL PROPOTIONAL CAMERA

உடன் தேவை.

*தொடர்பு: 0777 283824.*

(சி/47396)

## VACANC

### INTERNAL AUDIT OI FICER

An N.G.O in Jaffna is looking for a suitable person for the above post.

Those applicants with the following may apply giving a detailed Resume with Name and Contact Telephone Numbers of 02 Non related referees within 07 days of this advertisement.

**1. Age** : Between 35-55 Years

**2. Qualification** : G.C.E. (A/L) with Accounts as a subject OR Accounting Qualification.

**3. Experience** : Those with 10 years Audit experience in a Goverment Auditing Department/ Departmental Audit Section OR a Reputed Commercial Company with good knowledge of Book-keeping, Costing and Stores Accounting.
Retired personnel who have Audit experience too are eligable to apply.

**4. Salary** : Negotiable and will commensurate with experience.

Send your applications to the following address:

**The Advertiser,**
**C/o. UTHAYAN.**

(C/47395)

## உதைபந்தாட்டம்: சென்.பீற்றர்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஜன.18

தைப்பொங்கலையொட்டி அராலி மாவத்தை விளையாட்டு கழகம் நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் நாவலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் மாவட்டமட்டத்தில் நடத்திய இப் போட்டியில் 36 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்றன.

தைப்பொங்கல் தினத்தன்று நடத்தப்பட்ட இறுதிப்போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகமும் நாவலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் யங்கென்றீஸ் அணியைத் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வென்றது.

(ஒ-185)

## மீனவர் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.18

அல்லைப்பிட்டியில் கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேற்றுக் கலந்துரையாடப்பட்டது.

அல்லைப்பிட்டி கடற்றொழில் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலுக்கு யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமை வகித்தார்.

அல்லைப்பிட்டி பிரதேச கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் குடியிருப்பில் எதிர்கொள்ளும் சிக்கல்கள், மீள்குடியிருப்பில் உள்ள தேவைகள் போன்றவை குறித்து ஆராயப்பட்டன.

(ஒ-202-204)

## சட்டமாணி கற்கைநெறி

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமாணிக் கற்கை நெறி அனுமதிக்கான பரீட்சை இம்முறை அனுராதபுரத்தில் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள இப் பரீட்சை அனுராதபுரம் வெலிசிங்க ஹரிச்சந்திர வித்தியாலயத்தில் நடைபெறும். பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஒ-202-203)

## INVITATION TO BID

**Health Buildings and Infrastructure Reconstruction Programme**
**Funded by World Vision**
**For the Ministry of Health of the**
**Democratic Socialist Republic of Srilanka**

**CONSTRUCTION OF FIVE GRAMODAYA HEALTH CENTERS:**

**LOT 1 : GHC NEERVELY SOUTH - CHINNAKALADAY IN JAFFNA DISTRICT**
(PROJECT NO.SL01C1 - 0101 / CONTRACT NO.SL01P1 - 0101)

**LOT 2 : GHC URELUE WEST - POKKANAI IN JAFFNA DISTRICT**
(PROJECT NO.SL05C1 - 0101 / CONTRACT NO.SL01P1 - 0102)

**LOT 3 : GHC KUDATHANAI IN JAFFNA DISTRICT**
(PROJECT NO.SL05C1 - 0103)

**LOT 4 : GHC KATHKOVALAM IN JAFFNA DISTRICT**
(PROJECT NO.SL05C1 - 0104)

**LOT 5 : GHC THUMPALAI EAST IN JAFFNA DISTRICT**
(PROJECT NO.SL05C1 - 0105)

1. A Mimorandum of Understanding between the Government of Sri Lanka and World Vision has been signed to rehabilitate the Health infrastructure in the areas affected by the Tsunami on 26th December 2004. World Vision has consented to provide assistance to the Ministry of Health of the Democratic Socialist Republic of Sri Lanka for the reconstruction of schools damaged by the Tsunami. The implementation partner of World Vision is **the United Nations Officer for Project Services (UNOPS) - Sri Lanka Project Implementation Facility (SLPIF).**

2. united Nations Office for Project Services - Sri Lanka Project Implementation Facility, herein after referred as "UNOPS - SLPIF" invites sealed bids from the eligible bidders for the Construction of five schools in Jaffna District given below:

| | Location | Bid Bond | ICTAD Grading |
|---|---|---|---|
| Lot 1 | GHC NEERVELY SOUTH - CHINNAKALADAY | Rs. 100, 000 | ≥M5 |
| Lot 2 | GHC URELUE WEST - POKKANAI | Rs. 100, 000 | ≥M5 |
| Lot 3 | GHC KUDATHANAI | Rs. 100, 000 | ≥M5 |
| Lot 4 | GHC KATHKOVALAM | Rs. 100, 000 | ≥M5 |
| Lot 5 | GHC THUMPALAI EAST | Rs. 100, 000 | ≥M5 |

3. Interested bidders may submit a written application and purchase set of bidding documents upon the payment of a non refundable fee **Rs. 3,000.00** for each lot. Bidding documents will be issued to the eligible bidders 9.30 am to 5.00 pm on working days from 19th Jan 2006 to 3rd Feb.2006 at UNOPS - SLPIF in Colombo at Park Avenue, Colombo 5 and UNOPS - SLPIF, Temple Road, Jaffna. **Contractors with ICTAD Grading mentioned above may submit the complete Bids (Lots 1,2,3,4 & 5) or partial bids Lot 1 or Lot 2 or Lot 3 or Lot 4 or Lot 5, provided full BOQ are submitted in a lot for each location.**

4. Additional information regarding the Bidding Documents will be available at the office of the Chief Technical Advisor of UNOPS - SLPIF at No.17, Park Avenue, Colombo 5.

5. This Invitation to Bids shall close at 2 pm on 3rd Feb 2006 at UNOPS office, 123, Temple Road, Jaffna. All bids must be addressed to **The Country Coordinator of UNOPS Sri Lanka Project Implementation Facility (UNOPS - SLPIF)** and accompanied by a Bid Security in the prescribed format.

6. **UNOPS - SLPIF** will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation or delivery of bids.

**Country Coordinator**
**UNOPS - SLPIF.**

(C/47392)

## கண்ணீர் அஞ்சலி

*எமது வித்தியாலய ஆசிரியர்*
**சிறிலோகேஸ்வரன்**
*அவர்களின் சகோதரர்*

### ஸ்ரீரங்கம் நகுலேஸ்வரன்

*அவர்கள் 16.01.2006 அன்று வட்டுக்கோட்டையில் காலமானதையிட்டு, அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.*

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்.
**கிளி/கனகபுரம் ம.வி., கிளிநொச்சி.**

(சி/47398) (32-34-15)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 18 - 05 - 1932

விண்ணில் 30 - 12 - 2004



### திருமதி செல்லையா சிதம்பரம்

*மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் -வாழ்ந்த*
*மங்கையூர் திலகமே அன்பு அன்னையே - அன்பு அன்னையே!*
*புனித வாழ்வில் புண்ணியங்கள் பல செய்தீர்!*
*ஞானவைரவர் திருவடி பணிந்தீர்*
*இனிய உமது முகம் எம் நெஞ்சை - விட்டகலாது*
*பாசமுடன் பேசி பண்புடனே வாழ்ந்திருந்தீர்*
*கனிந்த பேச்சும் நேசமொழியும் காதுகளில் - கேட்கிறதே*
*கடிதில் எமைப்பிரிந்து எங்கு சென்றீர் அம்மா!*
*உடல் தான் மறைந்தது உருவம் மறையவில்லை*

ஆத்மாசாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (45443)(26-32-34-15)

**பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள்



சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள் (பிரதம குரு, கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் தேவஸ்தானம்) அவர்கள் 10.01.2006 செவ்வாய்க்கிழமை அதிகாலை வைகுண்ட ஏகாதசி திதியில் சிவபதமடைந்தார்.

அவரின் இறுதிக்கிரியைகள் 11.01.2006 புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் 136/28, ஜோர்ஜ் ஆர் டிசில்வா மாவத்தையிலுள்ள இல்லத்தில் நடைபெற்றது. தகனக்கிரியைகள் நண்பகல் 12 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**
T.P. 2330459
0777887179
0777686029
Email - Skandaki @ sltnet.lk
- Skkuru@sltnet.lk

(சி-47393) (32.15.34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் ஞாபகார்த்தமாக படையியல் கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் ஒருகாட்சியையும், வடபோர்முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# படையியல் பயிற்சிக் கல்லூரியில் கேணல் கிட்டு நினைவு நிகழ்ச்சிகள்

கிளிநொச்சி, ஜன.18

கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 13ஆம் ஆண்டு நினைவுதினம் திங்கட்கிழமை விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையியல் பயிற்சிக் கல்லூரியில் சிறப்புற நினைவுகூரப்பட்டது.

காலையில் விசேட படையியல் ஒத்திகைப் பயிற்சியைத் தொடர்ந்து மாலை பி.ப 3 மணிக்கு மேஜர் சோதியா படையணியைச் சேர்ந்த வேணி தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பொதுச்சுடரினை வடபோர் முனைக் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான அன்ரன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை தளபதி ஜெரி ஏற்றிவைத்தார்.

கேணல் கிட்டுவின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலையை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிப் பொறுப்பாளர்களில் ஒருவரான புலிக்குட்டி ஏற்றிவைத்தார்.

பொது மாவீரர் படத்திற்கான மலர்மாலையைப் போர்ப் பயிற்சி ஆசிரியர் தமிழ்நிலா அணிவிக்க, 2001ஆம் ஆண்டு இதே நாள் வீரச்சாவடைந்த மாலதி படையணி தளபதி லெப். கேணல் மதியின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையை மாலதி படையணிப் போராளி கலைமகள் அணிவித்தார்.

கடந்த 3 நாள்களாக கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் ஞாபகார்த்தமாக நடந்த விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இடம்பெற்றன. இதில் மென்பந்தாட்டம், உதைபந்தாட்டம் வலைப்பந்தாட்டப் போட்டிகளும் அதனைத் தொடர்ந்து மாலை 7.30மணிக்கு அரங்க நிகழ்வுகளும் ஆரம்பமாகின. சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதிப் படையணி போராளி மாநிலவன் தலைமையில் நடைபெற்ற கலைநிகழ்வுகளில் அகவணக்கத்தைத் தொடர்ந்து போராளிகளின் கலைநிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நினைவுரையினை ராஜன் கல்விப்பிரிவு ஆசிரியர் குமரன் ஆற்றினார். தொடர்ந்து வெற்றிபெற்றவர்களுக்கானதும் விளையாட்டில் நடுவர்களாகக் கடமையாற்றியவர்களுக்குமான பரிசில்களை வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் வழங்கிக் கௌரவித்தார். (ஐ)

# அஞ்சல் அதிபர் தெரிவு: விரைவில் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.18

நாடளாவிய ரீதியில் சிற்றூழியர் மற்றும் உப அஞ்சல் அதிபர் தரங்களில் இருந்து, அஞ்சல் அதிபர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை விரைவில் நடத்தப்படவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் மூலம் அஞ்சல் திணைக்களம் 327 பேரைத் தெரிவு செய்வதற்கு தீர்மானித்திருந்த போதிலும் அதில் 84 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும்-

எஞ்சிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு இன்னொரு போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளதாகவும்-

யாழ். பிரதம தபாலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அவசர அவசரமாகக் கோரப்பட்டன. அதற்கான இறுதித்தினம் கடந்த ஆண்டு டிசெம்பர் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்துள்ளது.

பரீட்சை மிக விரைவில் நடத்தப்படவுள்ளது என்றும் அஞ்சலக அதிகாரி தெரிவித்தார். (ஐ-12-14)

# தீவுப் பகுதியில் இருந்தும் நேற்று பல குடும்பங்கள் வன்னி பயணம்

அரியாலை,ஜன.18

குடாநாட்டில் அதிகரித்துவரும் கொலைச் சம்பவங்களால் பீதியடைந்துள்ள மக்கள் வன்னிப் பெருநிலப் பரப்புக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். இவ்வாறு இடம்பெயர்வோரின் எண்ணிக்கை நேற்று அதிகரித்துக் காணப்பட்டது.

தீவுப் பகுதிகளில் இருந்து பல குடும்பங்கள் தங்கள் வீட்டுப் பாவனைப் பொருள்களுடன் வண்டி வாகனங்களில் இடம்பெயர்ந்து சென்றதைக் காணக்கூடியதாகவுள்ளது. யாழ். நகரப் பகுதி ஊடாக நேற்று தீவுப்பகுதிக் குடும்பங்கள் பல இடம்பெயர்ந்து சென்றன.

மர்மக்கொலைகள் மற்றும் இராணுவ நெருக்குவாரங்களுக்கு அஞ்சியே தாங்கள் குடும்பத்தோடு பாதுகாப்புக் கருதி இடம்பெயர்ந்து வன்னிக்குச் செல்கிறோம் என்று குடும்பஸ்தர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-17)

# பொதுச் சேவையாளர்களின் படுகொலைகளுக்கு கண்டனம்

## முதலுதவிச் சங்க யாழ். கிளை அறிக்கை

கிளிநொச்சி, ஜன.18

குடாநாட்டில் பொதுச் சேவையாளர்கள் கொலை செய்யப்படுவதை இலங்கை முதலுதவிச் சங்கம் கண்டித்திருக்கிறது.

பொதுச் சேவையாளர் நாகேந்திரம் போஜனின் குடும்பத்தினர் மீது நடத்தப்பட்ட கொலைத் தாக்குதல் தொடர்பாக இலங்கை முதலுவிச் சங்கத்தின் யாழ். மாவட்டப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குடாநாட்டில் இராணுவத்தினரும் அதனோடு சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களும் திட்டமிட்டு நடத்துகின்ற கைதுகள், கடத்தல், கொலைகள், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன.

அந்த வரிசையில் இலங்கை சென்.ஜோன் அம்புலன்ஸ் வடமாகாண ஆணையாளரும் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்க தலைவரும் இலங்கை முதலுதவிச் சங்க செயற்குழுத் தலைவருமாகிய நாகேந்திரன் போஜன் அவர்கள் உட்பட அவரின் குடும்பத்தினர் 16.01.2006 அதிகாலை 12 மணியளவில் முதலியார் கனகசபை வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள அவரது வீட்டிற்கு வெள்ளை வானில் வந்த இராணுவ புலனாய்வாளர்களும் ஒட்டுக்குழுக்களும் இணைந்து கொடூரமான முறையில் சுடப்பட்டுள்ளனர். அதன் போது போஜனின் மனைவி (இலங்கை சென். ஜோன் அம்புலன்ஸ் வடமாகாண உதவி மாவட்ட ஆணையாளர்), மகளான ரேணுகா (ஆங்கில ஆசிரியர்), சண்முகா ஆகியோர் உயிரிழந்துள்ளனர். போஜனின் மகனான உல்லாசன் (கணித ஆசிரியர்) ஆகியோர் படுகாயமுற்ற நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறான பொதுச் சேவையில் ஈடுபடுகின்ற சேவையாளர்களை கொடூரமானமுறையில் கோழைத்தனமாக கொலை செய்யும் செயலினை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதோடு, இவ்வாறான செயல்கள் தொடருமாயின் போஜன் அவர்களின் வழி நடத்தலிலும் அரவணைப்பிலும் வளர்ந்த ஆயிரம் ஆயிரம் தொண்டர்களாகிய நாங்கள் பொது சேவையினை தூக்கி எறிந்துவிட்டு நாம் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான விடுதலைப் போராட்டத்தில் இணைந்து ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை தோன்றும் என்பதனை இறுதியாக கூறிவைக்க விரும்புகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பேச்சுகளை ஆரம்பிக்க உலக வங்கி வலியுறுத்து

வன்முறைகளை உடனடியாக நிறுத்தி பேச்சுகளை ஆரம்பிக்கும்படி கொழும்புக்கான இயக்குநர் உலக வங்கி பீற்றர் ஹரோல்ட் அரசையும் விடுதலைப் புலிகளையும் கோரி , யுள்ளார்.

மோசமடைந்து செல்லும் தற்போதைய நிலைமையில் எட்டப்படாத உடனடி முன்னேற்றம் நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் விழுந்த ஆழமான வடுவாகவே அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஏனைய பன்னாட்டு அமைப்புகள் போலவே தானும் இரு தரப்பையும் வன்முறைகளைக் கைவிட்டுவிட்டு கூடிய விரைவில் பேச்சுகளை ஆரம்பிக்கும்படி வலியுறுத்துவதாகக் கூறியுள்ள உலக வங்கி இயக்குநர் தனது எதிர்பார்ப்பு தொடர்பில் சாதகமான திருப்புமுனைக்காக நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் வருகையில் நம்பிக்கை கொண்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான உலக வங்கியின் உதவி கடந்த 20 ஆண்டுகளாகவே அமைதி நிலையின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டு வருகிறது என்றும் -

ஆகவே அரசும் விடுதலைப் புலிகளும் இயலுமான - விரைவில் பேச்சுகளை ஆரம்பிக்க முன்வரவேண்டும் என்றும் - அவர் கோரியுள்ளார். (ஒ)

# நேர்மையான அரசை அச்சுறுத்துவது விடுதலைப் புலிகளுக்கு நல்லதல்ல

## வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

ரணில் விக்கிரமசிங்க காலத்தில் விடுதலைப் புலிகள் ஏமாற்றப்பட்டனர் என்பதற் காக மஹிந்த ராஜபக்ஷவும் அதே பாணியில் ஏமாற்றுகிறார் என்று விடுதலைப் புலிகள் கருதுவது தவறு என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமவீர குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்னுமொரு ரணில் விக்கிரமசிங்க அல்லர். மிகவும் நேர்மையுடனும் பொறுமையுடனும் செயற்படும் தற்போதை அரசை திட்டமிட்டே வன்முறைகளுக்குள் தள்ளவைக்கும் விடுதலைப் புலிகளின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது. அவர்களின் சதி வலைக்குள் அரசு ஒருநாளும் வீழ்ந்து விடாது என்று மங்கள சமரவீர தெரிவித்தார்.

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் பேச்சு என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு அரசு ஒருபோதும் இணங்கப்போவதில்லை. ஆனால், இதுவரை குறிப்பிடப்படாத இன்னுமொரு புதிய இடத்தில் பேச்சுகளை நடத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஒ)

# யாழ். ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்கக் கோரிக்கை

அரியாலை, ஜன.18

யாழ். நகரச் சூழலில் அமைந்திருக்கும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு சங்கப் பணியாளர்கள் முழுமையாகத் தங்களை அர்ப்பணித்து நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பொது முகாமையாளராகப் பதவியேற்றிருக்கும் கே.கவிந்திரதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய பொறுப்பை ஏற்ற பின்னர் சங்கப் பணியாளர்களுடன் அவர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

சங்கத்தின் நிதி நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. இதனை ஈடுசெய்வதற்கும் வருங்காலத்தில் சங்கத்தினை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கும் சகல பணியாளர்களினதும் ஒத்துழைப்பு அவசியம்.

இதனைக் கருத்தில் கொண்டு சகல பணியாளர்களும் வரும் காலத்தில் தமது வியாபார நடவடிக்கையைப் பெருக்கி, பெரும் பணியாற்ற வேண்டும் - என்றும் தெரிவித்தார்.

புதிய பொதுமுகாமையாளர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சங்கத்தின் கிளைகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு சங்கக் கிளைகளில் நிலவும் குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

அவருடன் சங்கத்தின் ஆளணி முகாமையாளர் எஸ்.மனோகரனும் சென்றார்.

அத்துடன் முற்றவெளியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் சங்கத்தின் எரிபொருள் நிலையக் கட்டடத்தையும் அவர் பார்வையிட்டு பணியாளர்களுடன் அவற்றின் குறைபாடுகள் குறித்தும் கலந்துரையாடினார். (ஐ-17)

# பொன்னாலையில் தேடுதல் நடவடிக்கை

வலி.மேற்கு, ஜன.18

நேற்றுமுன்தினம் அதிகாலை தொடக்கம் பொன்னாலைக் கிராமத்தில் கடற்படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். அதிகாலை வீடுகளுக்குச் சென்ற கடற்படையினர் மக்களை நித்திரையில் இருந்து எழுப்பி வீடுகளுக்குள் சென்று சோதனை மேற்கொண்டனர். பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச அலுவலர்கள் மட்டும் கிராமத்தை விட்டு வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலையடுத்து கடற்படையினர் சோதனைகளை அதிகரித்துள்ளனர்.

பொன்னாலையிலுள்ள வீடுகளுக்குச் சென்ற கடற்படையினர் வீடுகளில் உள்ளவர்களின் விவரங்களை பதிவுசெய்துகொண்டு சென்றனர் என்று இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

SISIL - 80 குளிர்சாதனப் பெட்டி, CEYAMA 2" Self Prime, 1 H.P. தண்ணீர் பம், வீணை, 10 மாத சிவப்பு பேட்டுக்கோழி கள் 70, 3மாத பேட்டுக்குஞ்சுகள் 100, Singer தையல் மெசின் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 489, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் T.P.No.: 0777592649. (45400)

கரும்பலகை, வாங்கு, மேசை, தகரம், பனை மரம், நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் மோட்டார் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 105, K.K.S வீதி, சுன்னாகம் T.P. 0779527580. (45402)

40"x15", 30"x20" அளவுடைய இரும்புத் தூண், பனைமரம், தகரம் போன்றவற்றால் ஆக்கப்பட்ட இரண்டு கொட்டகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776063173. (45421)

சிறிது காலம் பாவித்த றொபின் 20 நீர் இறைக்கும் இயந்திரம் 30 அடி நீளமான கிணற்று வயருடன் விற்பனைக்குண்டு. விலை 43000 ரூபா ஆகும். தொடர்பிற்கு சி.சற்குணம், இணுவில் தெற்கு. தொ.பே. 071 2516851. (45410)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் லண்டனில் சிவில் இஞ்சினியறிங் (மொறட்டுவ பல்கலைக்கழகம்) தொழில் புரியும் 1974, மிருகசீரிடம் முதலாம் பாதம் பிறந்த மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2783, மே/பா உதயன். (45407)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1976, அவிட்டம் 3ஆம் பாதம், கும்பராசி, சுய தொழில் செய்யும் மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. 2784, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (45437)

## அறை வாடகைக்கு

சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் பெண்கள் தங்குவதற்கான அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: T.P.No.: 021 222 3318, 021 2226020. (45419)

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட நினைவு மலர் கவர் படங்கள் கூல் லெமனேசன் செய்து பெற்றுக்கொள்ள,
**ஸ்ரீபதி நேரச்சகம்**
604 K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

வீடியோ கசற், வீடியோ CD, கொப்பி றாக்கை, அலுமினிய பிற்றிங் என்பன விற்பனைக்குண்டு.

**ஜனனி வீடியோ சென்றர்**
வட்டுக்கோட்டை வீதி,
சித்தன்கேணி.
(45447) (21.11.15)

## தவறிவிட்டது

மயிலணி வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த மாணிக்கம் முகுந்தன் என்பவரது தே.அ.அட்டை (இல.800311560V), வி.அ. அட்டை மற்றும் சில முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (45426)

தனபாலசுந்தரம் சறோஜினிதேவி என்பவருடைய தே.அ.அட்டை (625554039V), விசேட அ. அ. என்பன 12.01.06 அன்று காரைநகர் சிவன்கோயிலடியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் 527, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும் (45403)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 23.01.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, கரன் - அரசடி, நல்லூர் பாம் சென்ரர் -19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-47305)

## மீண்டும் வாழை பயிரிடும் முயற்சியில் விவசாயிகள்

கோப்பாய், நீர்வேலி பகுதிகளில் உள்ள தோட்டங்களில் வாழைச் செய்கையை மேற்கொள்வதில் இம்முறை விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

கடந்த ஆண்டு இறுதியில் பெய்த கனத்த மழை மற்றும் கடும் காற்றினால் இப்பகுதிகளில் உள்ள தோட்டங்களில் வாழைகள் அழிவுற்றன.

அழிவடைந்த வாழைகளுக்குப் பதிலாக தமது தோட்டங்களை மீளச் சீரமைத்து புதிதாக வாழைக் குட்டிகளை நடுவதில் விவசாயிகள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதே வேளை- குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலைகளும் திடீரென அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி, கல்வியங்காடு சந்தைகளில் ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 25 ரூபா முதல் 30 ரூபா வரை விற் கப்படுகின்றது.(ஐ-17)

## நிவாரணத்துக்கு கோதுமை மா

கைதடி பல நோக்குக். கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணத்தில் ஜூலை, ஒகஸ்ட்,செப்ரெம்பர் மாதங்களுக்குரிய கோதுமை மாவை தற்போது விநியோகித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

## ஹற்றன் நஷனல் வங்கி

**அடகுப் பொருள் மீட்டல்/ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

எமது வங்கி யாழ்ப்பாணக்கிளை மற்றும் சுன்னாகம் கிளையில் அடகுவைத்து ஒரு வருட காலத்தினுள் மீட்கப்படாத அடகுப்பொருள்கள் முன்னர் அறிவிக்கப்பட்டமைக்கு அமைவாக 21.01.2006 சனிக்கிழமை 9.30 மணிக்கு யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும்.

(சி-47391)(21.11.15) - முகாமையாளர்.

உ

சாவகச்சேரி
**அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

## துர்க்காதேவி திருமண மண்டபம் மங்களகரமான திறப்புவிழா

*அடியவர்கட்கு அருள்பாலித்தருளும் அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் கிழக்கு வீதியிலே அமைக்கப்பெற்றுள்ள துர்க்கா திருமண மண்டபத்தினை நிகழும் பார்த்திப வருடம் தை மாதம் 5ஆம் நாள் (18.01.2006) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி முதல் 3.30 மணி வரையுள்ள மங்களகரமான சுபவேளையில் திறந்துவைக்க அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.*

(45439)(21.11.15) – தர்மகர்த்தா.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் கண்ணீர் அஞ்சலியும்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி **மோ.மகாலெட்சுமி** அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **மருதப்பு கனகசபை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்,
(45434) யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

## நீங்கா நினைவில் மூன்றாண்டுகள்

மலர்வு 27 - 04 - 1938



உதிர்வு 01 - 02 - 2002

அமரர் **வெ.வேலு (கந்தையா)**

(ஓய்வுபெற்ற மின்கம்பி இணைப்பாளர்)

திதி: 17.01.2006

*ஆண்டுகள் பல ஆனாலும் எம் துயர் மாறாது அப்பா!*
*என்றென்றும் உங்கள் நினைவோடு வாழும்*

அம்பலவாணர் வீதி,
உடுவில்கிழக்கு, சுன்னாகம்.

**மனைவி, பிள்ளைகள், மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.**

(45436)(21.11.15)

# EMPLOYMENT OPPORTUNITIES

*World Vision is an International Christian humanitarian, relief and development agency looking for suitable qualified candidates for the positions of,*

**POST OF ZONAL / DISTRICT CHILD PROTECTION COORDINATORS**

This position will Strengthen technical capacity on the field and ensure that a well-rounded Child Rights program is effectively implemented within the Zone keeping keep in mind program goals and to ensure co-ordination of World Vision's work with other agencies at a local level.

***The position requires,***

Professional qualification in Social Work, Psychology, Community Development or related disciplines

1 2 - 5 years or more work experience in child rights, child protection, social work or community development or other related fields
2 Fluency in Tamil and English
3 Working Knowledge of Microsoft Word, Excel, Power Point
4 Experience in networking and coordination
5 Good team player, ability to play a support role and also lead
6 Passionate and committed about children's issues and field work
7 Cross-cultural sensitivity, flexible, emotional maturity and physical stamina.
8 Strong interpersonal skills.
9 Able and willing to travel
10 Knowledge of and adherence to the Child Protection, Red Cross and NGO Code of Conduct.
11 Comply with World Vision's child protection policy and behavior protocols

**Job Location**: Jaffna – Northern Zone – 1 , Jaffna – 1 & Kilinochchi - 1

**POST OF CHILDREN'S PROGRAM ASSISTANTS**

This position will manage Child Friendly Spaces, mobilize volunteers for Child Friendly Spaces, ensure support is accessed by vulnerable families and children and be the key persons responsible to build relationships with children, families and communities.

***The position requires,***

Minimum A level Qualification
1 Work experience with children or Community development experience
2 Knowledge of Tamil
3 Passionate and committed about children's issues and field work
4 Ability to work in and contribute to team building environment.
5 Cross-cultural sensitivity, flexible, emotional maturity and physical stamina.
6 Strong interpersonal skills.
7 Able and willing to travel
8 Adherence to the Child Protection, Red Cross and NGO Code of Conduct.

**Job Locations**: Jaffna, Killinochchi & Mullaitivu.

World Vision Lanka offers attractive remuneration package, based on individual competence and skills. If you are a person who meets the above requirements and are willing to work with the poor and the oppressed, sometimes in difficult conditions, Please apply within a week of this advertisement with your CV, contact No., names and addresses of three non-related referees to: **World Vision Lanka,**
**Human Resources Department (Northern Zone),**
**227, 3rd Cross Street,**
**Jaffna.**
**Fax : 0212229605**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவை நெஞ்சில் நிறுத்தி...

முக்கண்ணன் நல்கியது 14 . 01 . 1927



எம் கண்கள் மல்கியது 19 . 12 . 2005

### வைரமுத்து இளையதம்பி (தருமு)

*மாதமும் ஒன்று கடந்ததோ?*
*பிதாவே நீங்கள் எமைப் பிரிந்து*
*நாதமாய் செவிகளில் ஒலிக்கிறதே*
*வேதமாய் நீங்கள் மொழிந்த வாசகங்கள்*
*மோதும் துயரதால் இதயம் கனத்திடவே - உங்கள்*
*பாதங்களை எம் நெஞ்சில் நினைத்து*
*நயனங்கள் பூத்த கண்ணீர்ப் பூக்களால்*
*- பூசனை செய்கின்றோம்.*

இன்று எமது குடும்பத்தலைவனின் 31ஆம் நாள் அனுஷ்டிக்கப்படும்.

முகவரி:
இல.30, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தங்களை என்றும் மறவாத நினைவுகளுடன் வாழும்
**குடும்பத்தினர்.**

(45753)(30-12-45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 07 . 06 . 1974



ஆண்டவன் அடியில் 29 . 01 . 2005

### திருமதி பத்மநாதன் பத்மாவதி

*ஓர் ஆண்டு போனதம்மா ஓராயிரம் ஆண்டு போனாலும்*
*உன் நினைவு மாறாதம்மா எங்கள் செல்வமே!*
*உங்கள் நினைவு எங்கள் உயிர் உள்ளவரை எம்*
*உள்ளங்களில் விழிநீருடன் நிலைத்திருக்கும்*
*தங்கள் ஆத்மா நிலையான நித்திய ஆத்ம சாந்திபெற*
*இந் நினைவு மலர்தனை தங்கள் பாதமலர்களுக்கு*
*எமது கண்ணீர் நிறைந்த காணிக்கையென*
*சமர்ப்பிக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

19/1, பிரதான வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளை,
பெற்றோர், சகோதரர்கள்.

(45756)(30-12-45)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி துரையப்பா செல்லாச்சி

சரவணையைப் பிறப்பிடமாகவும், இல.9, இராமகிருஸ்ணா அவனியூ, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரையப்பா செல்லாச்சி 16.01.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகப்பர் துரையப்பாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மருதையனார் சேதுப்பிள்ளையின் அன்பு மகளும் பத்மநாதனின் (பட்டயக் கணக்காளர், சமாதான நீதிவான்), பாசமிகு தாயாரும் பத்மநாதன் நாகேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) அன்பு மாமியாரும் சுபத்திரா-நிரஞ்சன் (Director Deutsche Bank, Newyork), Dr.ஐங்கரன் - லோறேனின் (Newzaland) அன்பு அப்பாச்சியும் லக்ஷ்மன் (USA), அர்ச்சன், வணியா, ரம்மியா (Newzaland) ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான Dr.கனகசபை, முத்தாச்சி, முத்து, சின்னத்தங்கம் மற்றும் செல்வம், குமாரநாயகம் (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (19.01.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றுப் பின்னர் பூதவுடல் தகனக் கிரியைக்காகப் பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.: 0112361553

தகவல்:
**து.பத்மநாதன் (மகன்).**

(45764)(30-12-45)

### திருமதி கந்தையா பவளம்மா

கச்சேரி நல்லூரை பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பவளம்மா அவர்கள் நேற்று (17.01.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கந்தையாவின் மனைவியும் அரங்கநாயகி, ஜெகதாம்பாள், தயாபரன், கௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும் புலேந்திரன், சகுந்தலாதேவி, அமரர் அம்பிகாவலனின் மாமியும் சசிகுமார் (விவசாயத் திணைக்களம் யாழ்ப்பாணம்), சசிரஜனி (ஆசிரியை, பாலிநகர் மகாவித்தியாலம்), சசிகாந்தன் (நடனத்துறை, யாழ் பல்கலைக் கழகம்), சசிறூபன் (மாணவன்), துஷியந்தன் (பிரான்ஸ்), கஜந்தன் (மாணவன்), துஷாந்தி (மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**புலேந்திரன் (மருமகன்),**
**அ். கௌரி (மகள்).**

(சி-47405)(30-12-45)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
பூ.தர்ஷிதாவின் அன்புத் தந்தை
**ஐயம்பிள்ளை பூபாலசிங்கம்**
அவர்கள் 15.01.2006 அன்று
காலமானதையிட்டு ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவித்துக்
கொள்வதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சக மாணவிகள்,**
**A/L 2007**

(45950)(30-12-45)

## மரண அறிவித்தல்கள்

### நமசிவாயம் ஐயாத்துரை



சாவகச்சேரி, பெரிய அரசடியைப் பிறப்பிடமாகவும் கிராம்புவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஐயாத்துரை 16.01.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பெரிய அரசடி நமசிவாயம் - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் சுந்தரம் (சிலாவத்தை), அமரர் கனகசபை, நாகம்மா, சரஸ்வதி, இராசம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் சுப்பிரமணியம், சரவணமுத்து, நல்லம்மா, இராசம்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வேம்பிராய் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் கட்டை வீதி,
கிராம்புவில், சாவகச்சேரி.

தகவல்:
**செல்லம்மா (மனைவி).**

(சி-47404)(30-12-45)

### தம்பையா சரசகோபால்

**(மணி - இளைப்பாறிய இ.போ.ச. சாரதி)**

காலையடி தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட தம்பையா சரசகோபால் நேற்று (17.01.2006) செவ்வாய்க்கிழமைகாலமானார்.

அன்னார் தம்பையா (இளைப்பாறிய ஆசிரியர்) - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், புஷ்பராசா (சுவிஸ்), கமலராசன் (பிரான்ஸ்), ரஜேஸ்குமார் (கனடா), அமரர் சுரேஷ்குமார், சசிகுமார், யுகந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2006) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காலையடி தெற்கு,
பண்டத்தரிப்பு.

(சி-474)6)(30-12-45)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்,**
**தாய், தந்தை, சகோதரர்கள்.**


மனோகரா யாழ்ப்பாணம்
அதிரடி பொங்கல் வெளியீடு



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
(Dts நவீன ஒலிநுட்பத்துடன்)
ஆதி
இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
தினசரி:
பு.நே.
10.30, 1.30, 4.30, 7.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா
மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சி நேரம்:
8.30, 12.00, 3.30



ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா, பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்



விஷால், மீராஜஸ்மின்
மற்றும் பலர் நடித்த
சண்டைக்
கோழி
தினசரி:
[illegible] 5.30


## மரண அறிவித்தல்கள்

### நமசிவாயம் முரளிதரன்



ஆடுவான் தோட்டம், அல்வாய் கிழக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவசிவாயம் முரளிதரன் 16.01.2006 அன்று அகால மரணமானார்.

அன்னார் கார்த்திகேசு நமசிவாயம், நமசிவாயம் சிவபாக்கியம் தம்பதியரின் புதல்வனும் ரவீந்திரன் (அமெரிக்கா), பாலேந்திரன் (பெல்ஜியம்), ராஜேந்திரன் (கனடா), சுபேந்திரன் (கனடா) காலஞ்சென்ற லோகேந்திரன், ஞானேந்திரன் (அமெரிக்கா), திருமதி செல்வராணி நேசலிங்கம், திருமதி உதயராணி குகதேவன், ஜெயராணி (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரனும் குகதேவன் (சுதா, ரேட்சென்ரர், நெல்லியடி), நேசலிங்கம் (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை), Dr.அம்பிகாதேவி ரவீந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும் கோபி, தனா, பரிமளா, கோகுலராஜ், கஜீபன், ராஜமனோகரி, உஜானா, சசிகாந் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2006) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் கரகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடுவான் தோட்டம்,
அல்வாய் கிழக்கு, அல்வாய். (45758)(30-12-45)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி சின்னப்பொடி முதலிச்சிஅம்மா



நவபுரம், கைதடியைச் சேர்ந்த திருமதி சின்னப்பொடி முதலிச்சிஅம்மா நேற்று (17.01.2006) செவ்வாய்க்கிழமை நண்பகல் காலமாகிவிட்டார்.

அன்னார் வல்லி சின்னப்பொடியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வெள்ளையன் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் S.R. கட்டட ஒப்பந்தகாரர் இரத்தினம், தங்கத்துரை (பிரான்ஸ்), கிருஸ்ணன் காலஞ்சென்ற இராசம்மா, திருமதி கனகா (பெல்ஜியம்), திருமதி இராசமணி, கந்தையா (வர்த்தகர், நவபுரம்), திருமதி செல்லம்மா, சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கைதடி ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவபுரம்,
கைதடி. (45757)(30-12-45)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி பத்மாவதி கனகலிங்கம்

இல.7, பாரதி வீதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பத்மாவதி கனகலிங்கம் அவர்கள் 16.01.2006 திங்கட்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர் கனகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் பத்மலிங்கம், கிருபாகரன், சந்திரவதனா, சந்திரகலா, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் குகதாசன் (ஓய்வுபெற்ற இயன் மருத்துவர்), கமலாவதி காலஞ்சென்ற நல்லநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சற்குணவதி, காலஞ்சென்ற ஆசிரியர் நல்லையா, தர்மபூமணி அம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.106, கச்சேரி, நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (45759)(30-12-45)

தகவல்:
**ப.குகதாசன் (சகோதரர்).**

### சுப்பிரமணியம் ஜெயரட்ணம்

**(பாதுகாப்பு உத்தியோகத்தர்,**
**மக்கள் வங்கி,**
**கன்னாதிட்டிக்கிளை)**



நல்லூர், கொண்டலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம், ஜெயரட்ணம் நேற்று (17.01.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

89, கொண்டலடி லேன்,
நல்லூர். (45754)(30-12-45)

தகவல்:
**சு.கணோஜி (மகன்).**

### ஆறுமுகநாதன் பாலசுப்பிரமணியம்



(சட்டத்தரணி, இளைப்பாறிய பணிப்பாளர் இளைப்பாற்றுத் திணைக்களம், பணிப்பாளர் சமூக சேவை திணைக்களம், பொதுமுகாமையாளர் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கொழும்பு, முன்னாள் செயலாளர் தர்மகர்த்தா சபை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம் - சீரணி, சண்டிலிப்பாய்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் டச்சு றோட், சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகநாதன் பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (17.01.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு றோட், சண்டிலிப்பாய்.

தகவல்:
**மகேஸ்வரி (மனைவி).**

(45762)(30-12-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி முயற்சிகளில் அடுத்த வாரத்தில் திருப்பம் ஏற்படும் என நோர்வே நம்பிக்கை

கிளிநொச்சி, ஜன.18

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகளில் அடுத்துவரும் வாரத்தில் ஏதாவது ஓர் திருப்பம் ஏற்படும் என்ற நம்பிக்கை நோர்வேக்கு உள்ளது.

கிளிநொச்சியில் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளருக்குக் கருத்து வெளியிடுகையில் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த வாரம் இலங்கை வர்வுள்ள நோர்வே உயர்மட்டத் தூதுக் குழுவினின் விஜயம் தொடர்பான ஆயத்தங்கள் குறித்தே புலிகளுடனான இன்றைய சந்திப்பில் பேசப்பட்டது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் மிகவும் ஓர் அபாயகரமான நிலையை எட்டியுள்ளது. இது எமக்குக் கவலையைத் தருகின்றது. ஒரு சுமுகமான நிலை ஏற்பட இருதரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். அதன் மூலமே சமாதான புறச்சூழலை உருவாக்க முடியும்.

அடுத்தவாரம் இங்கு வரவுள்ள நோர்வேயின் உயர்மட்டக்குழுவினர் இருதரப்பினரையும் சந்திக்கவுள்ளனர். இதன்போது நிச்சயம் ஒரு மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை அனைவரிடமும் உள்ளது. அந்த நம்பிக்கை எமக்கும் உண்டு. - என்றார் அவர். (க-7-8)



# மட்டு. அலுவலகத்தைத் தாக்கியோரை கண்காணிப்புக் குழுவுக்குத் தெரியுமாம்

கிளிநொச்சி, ஜன 18

மட்டக்களப்பிலுள்ள இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கிளை அலுவலகத்தையார் தாக்கினார்க ளென்பது குறித்து தமக்குத் தெரியு மென் றும், ஆனால், அது தொடர்பில் இப்போது எதுவும் கூறமுடியாதென்றும் தெரிவித் திருக்கிறார் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட்.

நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டிற்குமிடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே கண்காணிப்புக் குழுவின் தலைவர் இவ்வாறு தகவல் வெளியிட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு இலங்கையில் போதியளவு பாதுகாப்பு உள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளாலும், இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியில் அரசினாலும் கண்காணிப்புக் குழுவிற்கு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

அண்மையில் மட்டக்களப்பில் இடம் பெற்ற எமது கிளை அலுவலகத்தின்மீதான தாக்குதல் சம்பவத்தில் புலிகளுக்கோ, அரசுக்கோ தொடர்பு இல்லையென்பது எமக்குத் தெரியும். இந்த தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பதுவும் எமக்குத் தெரியும். அதுபற்றி இப்போது எம்மால் எதுவும் கூற [illegible]யாது. தமிழர் தாயகப் பகுதியில் நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக தமிழ்ச்செல்வனு டன் கலந்துரையாடப்பட்டது.- என்று மேலும் கூறினார் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர். (க-3-7-8)

# நாடாளுமன்றத்துக்கு ஜனாதிபதியின் வருகையும் நேற்று ஒத்திவைப்பு

கொழும்பு,ஜன.18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்துக்கு வரவிருந்தார். ஆனாலும், தமிழ் எம்.பிக்களின் எதிர்ப்பினால் சபை அமர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதியின் வருகையும் ரத்துச் செய்யப்பட்டதாக மூத்த அமைச்சரொருவர் தெரிவித்தார்.

நேற்றைய தினம் பணம் தூய்தாக்கல் [illegible]டைச்சட்டமூலம், நிதிசார் கொடுக்கல் வாங்[illegible]களை அறிக்கையிடல் சட்டமூலம் [illegible]வற்றை நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிப[illegible]பிக்கவிருந்தார்.

ஜனாதிபதியின் வருகையினையொட்டி நாடாளுமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன ஆனாலும், தமிழ் எம்.பிக்களின் கடும் எதிர்ப்பு நடவடிக்கையினால் சபை அமர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி யின் வருகையும் தடைப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது. (க-3)


## UNIVAC
Software Engineering Park

சிங்கப்பூர் சிஸ்ரம் கொம்பியூட்டர் நிறுவனத்தின் Software Engineering பயிற்சிக்கான போட்டிப்பரீட்சை 05-02-2006ம் திகதி நடைபெறும்.

இப் போட்டிப்பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களிற்கு 16 மணித்தியால இலவச IT வகுப்பு (கருத்தரங்கு) நடைபெற உள்ளதால் போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரும் உடன் சமுகமளிக்கவும்.

213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## உள்ளூராட்சித் தேர்தல்

# திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற ஆளும் தரப்பு சமுகமளிப்பு முக்கியம்

## — ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு —

கொழும்பு, ஜன.18

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்வதற்காக ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் கண்டிப்பான உத்தரவொன்றை பிறப்பித்துள்ளார்.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் நடைபெற்றது. இதற்கு தலைமை வகித்த ஜனாதிபதி, மாகாண சபைகள் திருத்தச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் தனது அபிப்பிராயத்தை எந் நேரமும் வெளியிடலாமென்றும் அவ்வாறான அறிவிப்பை நாடாளுமன்றத்திற்கு வந்தால் அதனை விவாதித்து நிறைவேற்று[illegible]தற்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்[illegible]ரும் தயாராக இருக்க வேண்டுமென்றும் [illegible]கண்டிப்பாகக் கூறினார்.

இதற்காக இவ்வாரம் ஆளுங்கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பில் தங்கியிருக்க வேண்டுமென் றும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இதேவேளை அமைதி முயற்சிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இவ்வாரம் நடைபெறவுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது இதுபற்றி முக்கிய தீர்மானம் எடுக்கப்படுமென்றும் கூறினார். (க-3)

## திடீர் வெடிச்சத்தத்தால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும், வாகனங்களும் நகரப் பகுதியை விட்டு அவசர அவசரமாக வெளியேறின. சத்தம் கேட்டு நகரிலிருந்த படையினரும் திகிலடைந்து வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். பெரும் எண்ணிக்கையான படையினரும் அப்பகுதியில் வந்து குவிந்தனர். சில நிமிட நேரத்தில் நகரின் மத்திய பகுதி வெறிச்சோடியது.

நகரில் பஸ்நிலையத்தின் அருகே மின்சார நிலைய வீதியில் உள்ள படைநிலை மீது கிரனேட் வீசப்பட்டதாக தகவல் பரவியதாலேயே இந்தக் களேபரம் ஏற்பட்டது.

அது கிரனேட் வெடிப்பால் எழுந்த சத்தமா அல்லது தனியார் பஸ் தரிப்புப் பகுதியில் தரித்து நின்ற ஒரு பஸ்ஸின் டயர் வெடித்ததால் ஏற்பட்ட சத்தமா என்பதை உறுதிப் படுத்த முடியவில்லை. (க-3)

## நெல்லியடியில் வேட்டுச்சத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.18

நெல்லியடி - குஞ்சர் கடைப்பகுதியில் நேற்றிரவு 11.30 மணியளவில் தொடர்ச்சியாக வேட்டுச்சத்தங்கள் கேட்டன.

நேற்றிரவு பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் குஞ்சர் கடைச் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள இராணுவ முகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதனை அடுத்து படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் பரவலாக மேற்கொள்ளப்பட்டது. (3-6)

## அக்கரைப்பற்றில் பதற்றம்

அக்கரைப்பற்றில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட சமயம் இரு முஸ்லிம்கள் இனந் தெரியாத கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டனர். இதனால் அங்கு பதற்ற நிலை நிலவுகிறது.

ஆலையடிவேம்புப் பிரதேசத்திற்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த இரு முஸ்லிம்கள் இனந்தெரியாத கும்பலினால் தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலில் அட்டாளைச் சேனையைச் சேர்ந்த அப்துல்வாஹிட் என்பவர் உயிரிழந்தார் ஆதம்பாவா லெப்பை என்பவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தினால் பெரும் பதற்றநிலை தோன்றியுள்ளது. எல்லைப்புற தமிழ்க் கிராமங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

## தச்சன்தோப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர்களான சிதம்பரி கணேசரத்தினம் (வயது 46), விகவர் கிருஷ்ணன் (வயது 53) ஆகியோரின் சடலங்களே இவ்வாறு தலை யில் சூட்டுக் காயங்களுடன் மீட்கப் பட்டன.

கைதடிச் சந்தியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு பணி முடித்து கடையைப் பூட்டிவிட்டு இவர்கள் இருவரும் தச்சன்தோப்பிலுள்ள தமது வீடுகளை நோக்கிச் சென்றமையைத் தாங்கள் கண் டனர் என்று கைதடிப் பகுதியிலுள்ளவர்கள் கூறினர்.

இந்நிலையில் கைதடிப் பாலத்துக்குச் சமீபமாகத் தச்சன்தோப்புக்குச் செல்லும் கிராய் வீதியில் இவர்கள் இருவரின் சடலங்களும் கிடந்தன.

இந்தச் சடலங்கள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-க-3-78-15-12-86-75)

## 23 அதிகாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

23ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் அன்ரன் பாலசிங்கமும் அடேல் பாலசிங்கமும் கட்டுநாயக்காவை வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாலசிங்கம் வன்னி வருவதை கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனும் உறுதிப்படுத்தினார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் வன்னி செல்வதற்காக ஹெலிக்கொப்டர் வசதிகளை செய்துகொடுக்க அரசு இணங்கியிருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகள் சமாதான செயலக மட்டத்தில் இடம்பெறுவதாகவும் அறியமுடிகிறது.

சொல்ஹெய்ம் தலைமையிலான உயர் மட்டக்குழு வன்னியில் புலிகளின் தலைவரைச் சந்திக்கும்போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் உடனிருப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் - கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்காணிப்பாளர்கள் நேற்றுக்காலை நகரில் இருந்து புல்மோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயம், அவர்கள் 3ஆம் கட்டையில் நடந்த குண்டுவெடிப்பை எதிர்கொள்ள நேர்ந்தது என்றும் -

சம்பவம் நடந்த இடத்திலிருந்து 30 மீற் றர் தூரத்தில் அவர்கள் பயணித்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(க-3-151)


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail: [illegible]@expoavi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நிய, உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.